S. Nadarajah
Collection

விலை சதம் 5

முதற் பதிப்பு

பக்கங்கள் 4

“சுதந்திரன்”
விளம்பர விபரங்கள்
சுதந்திரனில் ஒப்பந்தத்தின் பேரில் விளம்பரம் செய்ய விரும்புகிறவர்களும், அவசரகால அறிவித்தல்களுக்கு விரும்புகிறவர்களும் எழுதுங்கள்.
மானேஜர்,
“சுதந்திரன்”
194 A. நட்டாரத் தெரு, கொழும்பு.

சுதந்திரன்
THE "SUTANTIRAN."
(A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE)
REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.

இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களினதும்
சுதந்திரத்திற்காக வெளிவருவது.

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO
ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

நாமார்க்கும் குடியல்லோம்

புத்தகம் 1 | கொழும்பு, சர்வஜித்து ௵ கார்த்திகை மீ 26உ வியாழக்கிழமை — Colombo, December, 11, 1947 — ஹிஜ்ரி 1367 முஹர்ரம் பிறை 27 | இதழ் 190

கிறிஸ்மஸ்
விற்பனை ஆரம்பம்
சேலைகள், சூட் துணிகள்,
ஷர்ட்டிங், சாரம், கம்பாயம்
பட்டுத் துணிவகைகள்
முதலிய சகலவித புடவைகளும் எங்களிடம் கிடைக்கும்
அழகான வர்ணங்களில், நேர்த்தியான ஆடை வகைகளை சகாய விலையில் கிறிஸ்மஸ் பண்டிகைக்கு வாங்குவதற்கு எங்கள் கடைக்கு முந்தி வாருங்கள்.
M. J. வேதநாயகம் & கோ.,
140, கெயிலர் வீதி, கொழும்பு.
Phone: 3411

‘வரவு செலவுத்திட்ட ரகசியம் வெளியானது உண்மையே!’

விஸ்கி, பீர், புகையிலை, மோட்டார்கார் வரி உயர்வு பல நாட்களுக்கு முன்பே தெரியும்

நியமன பிரதிநிதி மேஜர் ஓல்ட்பீல்டுக்கு நிச்சயமான தகவல் கிடைத்துள்ளது

இந்த அபாயகரமான விஷயத்தைப்பற்றி விசாரணை நடத்த வேண்டுமென்கிறார்

ஏராளச் செலவில் இலங்கைக்கு இத்தனை மந்திரிகளேன்?

திரு. கே. கனகரத்தினத்தின் ஆணித்தரமான கேள்வி

தோட்டத் தொழிலாளர் நிலைமைபற்றி மேஜர் பிரேஸ்ண் சிபார்சுகளை நிறைவேற்றாததேன்?

(திரு. குமாரவேல்)

கொழும்பு டிச. 10

பாராளுமன்றக் கூட்டம் நேற்று பிற்பகல் ஒரு மணிக்கு சபாநாயகர் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சில கேள்விகளுக்கு உணவு மந்திரியும் பிரதம மந்திரியும் பதிலளித்தபின் பட்ஜெட் விவாதம் தொடர்ந்து நடைபெற்றது.

பட்ஜெட் விவாதத்தின்போது புதிய வரிகள்பற்றியும் தேசப் பொருளாதார அபிவிருத்தி. விவசாய அபிவிருத்தி மந்திரிமாரின் சம்பளங்கள் படிச்செலவுகள் முதலியனபற்றியும் பல அங்கத்தினரும் பேசினார்கள்.

பட்ஜெட் விவாதம் சபையில் எடுக்கப்படு முன் அதிகரிக்கப்பட்ட வரிகள் வெளியில் எவ்விதம் தெரிய வந்ததென்பது பற்றி விசாரணை நடத்தப்படவேண்டுமென்று மேஜர் ஓல்ட்பீல்ட் கூறினார். குடிவகைகள், கார்கள், புகையிலை முதலியவற்றின் அதிகரிக்கப்பட்ட வரிகளைப்பற்றி பல நாட்களுக்கு முன்னரேயே தமக்குத் தெரியுமென்றும் இதுபற்றி அவசியம் விசாரணை நடக்கவேண்டுமென்றும் கூறினார்.

சபையிலே அங்கத்தினர் சிங்களத்திலும் தமிழிலும் பேசுவதை அனுமதிக்கவேண்டுமென்று திரு சோமவீர சந்திரசிரி கூறினார். சபா நாயகர் இதற்கு அனுமதியளிக்காததையும் கண்டித்துவிட்டு அரசாங்க கட்சியில் உள்ள பலர் சிங்களத்திலேயே பேசக்கூடமாட்டாது இருக்கின்றனர் என்றும் கூறினார்.

பாராளுமன்றக் கூட்டம் நேற்று பிற்பகல் ஒரு மணிக்கு சபாநாயகர் திரு. ஏ. எப். மொலமூரே தலைமையில் ஆரம்பமாயிற்று. திரு. வில்மட் ஏ. பெரேரா உணவு மந்திரியிடம் சங்கக் கடைகளுக்கென குறிக்கப்பட்ட அரிசி ரேஷன் புத்தகங்களை வேறு கடைகளுக்கு மாற்றுவது சம்பந்தமாக ஒரு கேள்வியைக் கேட்டிருந்தார் அதற்கு உணவு மந்திரி பதிலளிக்கையில், ரேஷன் புத்தகங்களை டிபுடி உணவுக்கட்டுப்பாட்டதிகாரியின் உத்தரவுடன் மாற்றிக் கொடுக்கலாமென்றும் புத்தகங்கள் மாற்றிக் கொடுக்கும்படி கேட்கும்போது விஷயம் நன்கு ஆலோசிக்கப்பட்டே செய்யப்படுமென்றும் கூறினார்.

உணவு உற்பத்தி பயிற்சியளிப்போர்களை நியமிப்பது முதலிய அதிகாரங்கள் முன்போல கல்வி மந்திரியுடன்தான் இருக்கின்றதா அல்லது கல்வி டைரக்டரிடமா என திரு. வில்மட் ஏ. பெரேரா கேட்டபோது கல்வி மந்திரி பதிலளிக்கையில் அவ்விஷயம் கல்வி டைரக்டருக்கே உரியதென்று கூறினார்.

தொழில் மந்திரியின் பாராளுமன்றக் காரியதரிசி முனிஸிபல சபைக் கூட்டத்தில் வீதிகளில் இருந்து வியாபாரம் செய்பவர்கள் சம்பந்தமாகப் பேசுகையில் இலங்கைப் போலிஸார் திறமையற்றவர்கள் என்று கூறியுள்ளது அரசாங்கத்தின் கருத்தை பிரதிபலிப்பதா என்று டாக்டர் என். எம் பெரேரா கேட்ட கேள்விக்கு பிரதமர் பதிலளிக்கையில் பாராளுமன்றக் காரியதரிசி மந்திரிசடையினரல்லவென்றும் எந்த அங்கத்தினரும் தாம் கூற விரும்பும் அறிக்கையை வெளியிடலாமென்றும் கூறினார்.

நவம்பர் 19-ம் தேதி நடைபெற்ற முனிஸிபல் சபைக் கூட்டத்தில் வேலையில்லா தொழிலாளருக்கு ஒரு மாதச் சம்பளம் கொடுக்கப்படவேண்டுமென்பதை தொழில் மந்திரியின் பாராளுமன்றக் காரியதரிசி ஆதரித்தார். இது அரசாங்கத்தின் கருத்தைப் பிரதிபலிப்பதாகுமா என்று டாக்டர் என். எம். பெரேரா கேட்டபோது பிரதமர் முதல் கேள்விக்குப் பதிலளித்தது போன்றே இதற்குப் பதிலளித்தார். பாராளுமன்றக் காரியதரிசிகள் வருங்காலத்தில் இவ்விதமான பொறுப்பற்ற அறிக்கைகளை வெளியிடுவதைத் தடுக்கும்படி பிரதமருக்கு டாக்டர் பெரேரா கூறினார்.

கடந்த 8 மாத காலத்திலும் பொலன்னறுவை விவசாயப் படையிலிருந்து நீக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை, தொழிலுக்கு அவர்கள் எடுக்கப்படும்பொழுது இருந்த நிபந்தனைகள் எவ்வளவு காலம் அவர்கள் சேவைபுரிந்தது, வேலையிலிருந்து நீக்கப்பட்டபோது நஷ்டஈடு அளிக்கப்பட்டதா, ஏன் அவர்கள் நீக்கப்பட்டார்கள் என்பனபோன்ற கேள்விகளுக்கு விவசாய மந்திரி திரு. டட்லி சேனநாயகா பதிலளித்தார்.

சேமிநிதி சர்டிபிக்கெட்டுகள் பற்றி நிதிமந்திரி கொண்டுவந்த ஒரு தீர்மானம் சபையில் நிறைவேறியது. அத்தீர்மானத்தின்படி இலங்கையில் இந்த சர்டிபிக்கெட்டுகளை விநியோகித்து ரூ. 10,000,000 சேர்க்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இதன்பின் பட்ஜெட் விவாதம் தொடர்ந்து ஆரம்பித்தது விவசாய மந்திரி திரு டட்லி சேனநாயகா பேசுகையில் எதிர்க் கட்சியினர் பேசியவற்றைக் கண்டித்துவிட்டு, இன்று புரட்சி, அடிவானிலே தோன்றுகின்றதென்றும் டாக்டர் கொலவின் ஆர். டி. சில்வாவின் கூற்றுப்படி இது எல்லா நாடுகளுக்கும் பொதுவென்றும் கூறினார். தொடர்ந்து பேசுகையில் இலங்கை சமசமாஜக் கட்சியின் தேர்தல் பிரசார துண்டுப் பத்திரமொன்றை சபையில் வாசித்துவிட்டு அதில் இருந்த கோரிக்கைகளுக்காக வேலை செய்யாது கோரிக்கைகளைப் பெற முடியுமாவென்று தாம் அறிய விரும்புவதாகவும் விவசாயத் தொழிலை இயந்திர மயமாக்குவது பற்றியும் அரசாங்கம் எடுக்கக்கூடிய முயற்சிகள் பற்றியும் இப்பொழுது எடுத்துள்ள முயற்சிகள் பற்றியும் விவசாய முன்னேற்றத்துக்கான நடவடிக்கைகள் பற்றியும் கூறினார்.

மேலும் அவர் பேசுகையில் காணிச் சட்டம் பற்றியும் [1933] அதன்படி தேச மக்களுக்கு காணி வழங்கப்படுவது பற்றியும், பெரிய நீர்த்தேக்க அமைப்பு பற்றியும் முந்திய விவசாய மந்திரி இலாகா ஆக 40 லட்சம் ரூபாய்தான் நெற் சாகுபடிக்கு செலவிட்டுள்ளதென்றும் 83,000 ஏக்கர் நிலம்தான் விவசாயத்துக்கு புதிதாக சேர்க்கப்பட்டதென்றும் கிருஷிக பகுதி செலவுகள் பற்றியும் கூட்டுறவு இயக்கம் பற்றியும் கூறினார்.

மாத்தறை தொகுதி அங்கத்தவர் திரு. ஹரி அபய குணவர்தன பேசுகையில் கூறியதாவது:-

தேசத்திலே இன்று கைத்தொழில் பாடசாலைகள் திறக்கப்படவேண்டியது மிக அவசியம். பிள்ளைகளுக்கு கைத்தொழில் கல்வி போதிக்கப்படுவது அத்தியாவசியம். தாய்ப்பாஷை மூலமே போதனைகள் இருக்கவேண்டும். காணியில்லாதவர்களுக்கு காணிகள் வழங்கப்பட வேண்டும்.

கடந்த வேலை நிறுத்தத்தில் கலந்துகொண்டிருந்த தினசரிச் சம்பள தொழிலாளர்களை திரும்பவும் வேலைக்கு அரசாங்கம் எடுக்கவில்லை. வேலையிலிருந்து நீக்கப்பட்ட குமாஸ்தாக்கள்கூட வேலைக்கு எடுக்கப்படவில்லை. இது மிகவும் இழிவான செயலாகும். தொழிலாளர் இயக்கத்தைக் குலைப்பதுதான் நோக்கம் போலும்.

தொழிற்சங்க உரிமைப் போராட்டத்தில் கலந்துகொண்டதற்காக துறைமுகத் தொழிலாளர் பலர் தண்டிக்கப்பட்டுள்ளனர். இப்பொழுதும் போக்குவரத்து முதலியன அதே மந்திரியின் கீழ் நடத்தப்படுகின்றன. இந்தக் கட்டுப்பாடுகள் முதலியன தொடர்ந்து அவருக்குக் கீழ் இருப்பின் கஷ்டமே ஏற்படும். ரயில்வே இலாகா இதற்கு ஒரு உதாரணமாகும். தொழிலகமிஷனர் தகுந்தமுறைப்படி நடந்துகொள்ளவில்லை. மந்திரிமாரதும் மற்றும் அங்கத்தவர்களதும் அலவன்ஸ்கள் குறைக்கப்படவேண்டும்.

மேஜர் ஓல்ட்பீல்ட் (நியமன அங்கத்தவர்) பேசுகையில் திரு. பீட்டர் கெனமன் பட்ஜெட் பற்றி பேசியதைப் பாராட்டிவிட்டு, சில பொருள்கள் மீது விதிக்கப்பட்ட வரிகள் அவசியமில்லையென்றும் மத்திய வகுப்பினரும் ஏழைகளும் கஷ்டப்படுகின்றனர் என்றும் பட்ஜெட்டில் உள்ள விஷயங்கள் சபையில் சமர்ப்பிக்கப்படுமுன் நிச்சயமாகவே வெளிவந்திருந்தனவென்றும் குடிவகைகளின் வரிகள் அதிகரிப்பது பற்றி முன்னரேயே வெளியிலுள்ளவர்களுக்குத் தெரியும் என்றும் இதனை விசாரணை செய்ய வேண்டுமென்றும் தாம் மந்திரியைக் குறைகூறவில்லையென்றும் ஆனால் இத்தகவல்கள் வெளிவந்தவிதம் பற்றி அறிய வேண்டுமென்றும் பட்ஜெட் பேச்சுக்கு பல நாட்களுக்கு முன்னரேயே அதிகரிக்கும் வரிகள் பற்றிய தகவல் தமக்குத் தெரியுமென்றும் கூறினார். இவர் தொடர்ந்து பேசுகையில் விவசாயத்துக்கு அதிக கவனம் செலுத்தப்பட வேண்டுமென்றும் கால்நடைகள் உற்பத்தி, கோழி வளர்ப்பு முதலியவைகள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டுமென்றும் உணவு உற்பத்திக்கு ஆதரவு அளிக்கப்பட வேண்டுமென்றும் கூறினார்.

வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு மக்கள் வந்து இடங்களைப் பார்ப்பது முதலியவை பற்றியும் விமானப் போக்குவரத்து பற்றியும் புதிய வரிகள் பற்றியும் அவற்றினால் வருமானம் அதிகரிக்குமாவென தாம் மந்திரியைக் கேட்பதாகவும் தொடர்ந்து பேசுகையில் அவர் கூறினார்.

வட்டுக்கோட்டை தொகுதி அங்கத்தவர் திரு. கே. கனகரத்தினம் பேசியதாவது:-

அரசாங்க சேவையில் நான் இருந்த காலத்தில் அரசாங்க கணக்குகள் சம்பந்தமான ஒரு இலாகாவிலே வேலைசெய்தேன். வெள்ளவத்தை - கல்கிசை தொகுதி அங்கத்தவர் அரசாங்க நிர்வாகத்தில் பிரதமருடன் சேர்ந்து வேலை செய்யும் காலமும் ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை.

(4-ம் பக்கம் பார்க்க)

பிரதம மந்திரி தமிழில்தான் பதிலளிப்பார்

சென்னை பாராளுமன்ற நிகழ்ச்சி

சென்னை, டிச. 8

சென்னை பாராளுமன்றத்தில் அங்கத்தினர்களின் கேள்விகளுக்கு பிரதம மந்திரி திரு ராமசாமி ரெட்டியார் தமிழிலே பதிலளித்தார். சென்னை பாராளுமன்றத்தில் தமிழ் தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய நான்கு பாஷைகளின் பிரதிநிதிகளிருப்பதால் தமிழறியாதார் அப்பதில்களைப் புரிந்து கொள்ள முடியாதலால் பிரதம மந்திரி தமிழில் பதிலளிப்பதுபற்றி ஓர் பிரச்னை கிளம்பிற்று. பிரதம மந்திரி தமிழில் பதிலளிக்கும் போது அதை அவரது காரியதரிசி ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துச் சொல்லலாம் என்று கல்வி மந்திரி அவினாசிலிங்கம் செட்டியார் யோசனை கூறினார். பாராளுமன்றத் தலைவர் அந்த யோசனையை ஏற்றுக்கொண்டார்.

இலங்கையின் விமானப் போக்குவரத்து

கொழும்பு- சென்னை பாய்ச்சல் இன்று ஆரம்பம்

போக்குவரத்து மந்திரியின் சவாரி

கொழும்பு, டிச. 10

கொழும்பிலிருந்து காங்கேசன்துறை வழியாக சென்னைக்கு இன்று முதல் இலங்கையின் விமானப்போக்குவரத்து ஆரம்பமாகும். இப் போக்குவரத்தில் முதலாவதாக பயணமாகும் டகோடாவிமானத்தில் போக்குவரத்து மந்திரி திரு ஜே. எல். கொத்தலாவலையும் சில அரசாங்க அதிகாரிகளும் பயணமாகிறார்கள். விமானம் ரத்மலானை விமான நிலயத்திலிருந்து காலை 8 மணிக்குப் புறப்பட்டு காங்கேசன்துறையில் தங்கி பகல் 10-05 மணிக்கு சென்னை போய்ச் சேரும். போக்குவரத்து மந்திரிக்கு சென்னையில் கன்னிமாரா ஹோட்டலில் பிரயாணிகள் ஓர் விருந்தளிப்பார்கள். அவர் மாலை 6 மணிக்கு கொழும்பு திரும்புவார்.

கோஸ்மிக் கிரண ஆராய்ச்சிச் சாலையில் தீ விபத்து

கொழும்பு, டிச. 9

சமீபத்தில் ஏற்பட்ட ஓர் தீ விபத்தின் காரணமாக கொழும்பு கோஸ்மிக் கிரண ஆராய்ச்சிசாலையில் உள்ள பல தஸ்தாவேஜுகள் நாசமடைந்துவிட்டன. அத்துடன் முக்கிய மின்சார யந்திரம் முற்றாக நாசமாகிவிட்டது.

பாராளுமன்றப் பேச்சுகள்

சிங்களத்தில் வேண்டுமெனக் கோரிக்கை

கொழும்பு, டிச. 8

பௌத்த மந்திரத்தில் நடைபெற்ற ஒரு சிங்கள ஆசிரியர்கள் கூட்டத்தில் உடனடியாக பாராளுமன்ற அங்கத்தினர்களுக்கு சிங்களத்தில் பேச வசதி செய்து கொடுக்கவேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

“கீழ்மாகாணத்தின் முதலாவது முதல்வகுப்புப் பாடசாலை”

மட்டக்களப்பு, டிச. 9

ஸ்ரீமத் ஸ்வாமி விபுலானந்தாவால் ஆரம்பிக்கப்பட்ட மட்டக்களப்பு ராமகிருஷ்ணமிஷன் சிவானந்த வித்யாலயம் கல்வி இலாகாவால் ஒரு முதல் வகுப்புக் கலாசாலையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதுவே கீழ்மாகாணத்தில் முதன் முதலாக இங்ஙனம் முதலாம் வகுப்புக் கலாசாலையாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

பாணந்துறையில் சி. எஸ். ஆர்.

பாணந்துறை, டிச. 8

ரோட்டரி கவர்னர் சி. எஸ். ரத்னசபாபதி முதலியாருக்கு வெள்ளிக்கிழமையன்று பாணந்துறையிலுள்ள ரோட்டரி அங்கத்தினர்கள் ஓர் விருந்தளித்தனர். விருந்துக்குத் தலைமை வகித்த திரு. டபிள்யூ. பி. எச். டயஸ் விருந்தாளியை வரவேற்றார். ரோட்டரி சங்கத்தார் சேவையைப் பற்றி திரு. எம். எச். ஜெயதிலக பேசினார்.

கட்டுப்பாடுகளும் கள்ள மார்க்கெட்டும் ஒழிக!

காந்திஜியின் திக் விஜயம்

புதுடில்லி, டிச. 8

கள்ள மார்க்கெட்டு கட்டுப்பாடுகளை ஒழிப்பதற்காக மகாத்மா காந்தி இந்தியா முழுதும் சுற்றுப் பிரயாணம் செய்வார் என்று ஒரு செய்தி கூறுகிறது.

இந்தியாவிலிருந்து 2400 மூடை விதை வெங்காயம்

யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ளது

யாழ்ப்பாணம், டிச. 9

யாழ்ப்பாணத்திலே வெங்காய உற்பத்தியாளரிடையே விநியோகிக்க வேண்டி தென்னிந்தியாவிலே யாழ்ப்பாணம், வடபகுதி விவசாயப் பொருள் உற்பத்தியாளர் கூட்டுறவு ஸ்தாபனம் வாங்கிய 600 டன் விதை வெங்காயத்தில் 2400 மூடை வெங்காயம் நேற்றிரவு ரயில் மூலம் வந்து சேர்ந்து இன்று இறக்கப்படுகின்றது.

இங்கு வாங்கப்பட்ட முழு வெங்காயமும் இரண்டரை லட்சம் ரூபா மதிப்புள்ளவைகள் என்றும் இவற்றை சங்க காரியதரிசி திரு வி. ஆர். முருகேசு என்பவர் சென்னை சங்கக் கடைகள் ரிஜிஸ்டிரார் உதவியுடன் தென்னிந்தியா திண்டுக்கல் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் மூலம் வாங்கியுள்ளார் என்றும் கூறப்படுகிறது

உதவி காணிக் கமிஷனரின் கோரிக்கையின் மேல் 100 டன் விதை வெங்காயத்தை இலங்கை மற்றப் பகுதிகளுக்கு விநியோகிக்க சங்கம் ஒப்புக் கொண்டுள்ளதாகத்தெரிகிறது. ஓர் கூட்டுறவு ஸ்தாபனம் இவ்வகம் முக்கிய உணவுப் பொருளை அயல் நாட்டுக்கு ஏற்றுமதி செய்ய இந்திய அரசாங்கம் அனுமதியளித்தது இதுவே முதல முறையாகும். [சு. மி-தந்தி]

கனி மரம் நாட்டும் இயக்கம்

பனைகளையும் வளர்க்குமாறு வேண்டுகோள்

கொழும்பு, டிச. 8

விவசாயப் பகுதியால் கனிமரம் நடும் இயக்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக யாழ்ப்பாணப் பகுதி உதவி விவசாய உத்தியோகஸ்தர் ஜெபரத்னம் (மா தோடை முதலியவற்றை வளர்த்து பயன் பெறுவதோடு வீதிகளில் நிழல் மரமாகப் புளியமரங்களை வளர்க்கவேண்டுமென்றும் பிரசாரம் செய்து வருகிறார்.

இதன் மூலம் பல லட்ச ரூபாய் நாட்டில் மிஞ்சுவதோடு இம் மரங்கள் வீதிகளுக்கு நிழலும், நிலத்திற்குச் செழிப்பும் தருவதாக அவரால் விளக்கப்படுகிறது. கடந்த 20 வருடங்களுள் மொத்தம் 11,000 பனை மரங்கள் வெட்டி வீழ்த்தப்பட்டிருப்பதாகவும், எனவே பனைகளை வளர்த்தலும் அவசியம் என அவர் அபிப்பிராயப்படுகிறார்.

பிரிட்டிஷ் பெண்கள் பெற்ற கறுப்பன்கள்

பிரிட்டனில் வளர இடமில்லை

அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படுவர்

லண்டன், டிச. 8

அமெரிக்க நீக்ரோ துருப்புகள் யுத்தகாலத்தில் பிரிட்டனில் தங்கியிருந்தபோது அவர்களுக்கும் பிரிட்டிஷ் பெண்களுக்கும் பிறந்த கரிய நிறக் குழந்தைகள் 5000 இருக்கின்றன. குழந்தைகள் கறுப்பாக இருப்பதால் அவர்களை வளர்க்க பிரிட்டிஷ் தாதிமார்கள் மறுப்பதாலும் பிரிட்டிஷ் சமுகத்தில் நிறத்துவேஷமும் நிறத்தடையுமிருப்பதால் அக் குழந்தைகளை பிரிட்டனில் வளர்க்க முடியாதிருப்பதாலும் அவர்களை அமெரிக்காவுக்கு அனுப்பி வைக்க அனுமதி கோரி லண்டனிலுள்ள நீக்ரோ க்ஷேமாபிவிருத்தி சங்கத்தார் உள்நாட்டு மந்திரிக்கு மனுச்செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த 5000 குழந்தைகளும் ஒரு வயதிலிருந்து 5 வயதுக்குட்பட்டவர்கள். (ராய்ட்டர்)

கள்ளத்தனமாகக் கடத்தப்பட்ட வெங்காயம்

வழியில் பிடிக்கப்பட்டது

யாழ்ப்பாணம், டிச. 9

ஆனையிறவுக்குச் சமீபம் ஒளிந்துகொண்டிருந்த ஓர் போலிஸ் உத்தியோகஸ்தர் ஒரு லொறியிலே ஒன்றரை டன் வெங்காயம் கள்ளத்தனமாகக் கடத்தப்பட்டுக்கொண்டிருந்தபோது கண்டுபிடித்தார். இதன் கள்ள மார்க்கெட் மதிப்பு 7000 ரூபாவாகும். இவ் வெங்காய மூடைகள் 40 தவிட்டு மூடைகள் நடுவே மறைத்து வைக்கப்பட்டிருந்தது. அவை யாவும் போலிசாரால் கைப்பற்றப்பட்டது.

இலங்கைக்கு ஒரு உருக்குத் தொழிற்சாலை

மஹாராவில் நிறுவப்படலாம்

கொழும்பு, டிச. 10

இலங்கையில் ஒரு உருக்குத் தொழிற்சாலை நிறுவப்படலாம் எனத் தெரிகிறது. இது சம்பந்தமாக லண்டனில் உள்ள ஒரு உருக்குத் தொழிற்சாலையுடன் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுவருகிறது. இது சம்பந்தமாக மஹார என்னும் இடமே இத் தொழிற்சாலைக்குப் பொருத்தமான இடமென்று தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

மேலும் 6000 காசநோயாளிகளுக்கு வசதிகள்

கொழும்பு, டிச. 10

இலங்கை அரசாங்கம் மேலும் 6000 காச நோயாளிகளுக்குப் படுக்கைவசதிகள் சித்தம் செய்யத் தீர்மானித்துள்ளது. இவற்றில் 3000 இப்போதுள்ள ஆஸ்பத்திரிகளிலும், மற்றும் 3000 இதற்கென நிறுவப்படும் விசேஷ நிலையங்களிலும் சித்தம் செய்யப்படும் எனத் தெரிகிறது. இதனைச் சித்தம் செய்ய மேலும் 10 அல்லது 15 வருஷமாகலாம் என்று கூறப்படுகிறது.

விளம்பரம்

வெள்ளவத்தை - பம்பலப்பிட்டி பகுதிகளில் ஒவ்வொரு வீடுகளுக்கும் 'சுதந்திரன்' பத்திரிகை ஆள் மூலம் தினசரி கொடுப்பதற்கு ஒழுங்குகள் செய்திருக்கிறபடியால் தேவையானோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு மனுச்செய்யவும்.

சந்தா பின்வருமாறு:-

1 மாதம்	ரூ. 2-00
3 மாதம்	ரூ. 6-00
6 மாதம்	ரூ. 12-00
12 மாதம்	ரூ. 24-00

மானேஜர்,
'சுதந்திரன்',
194 A, தட்டாரத் தெரு,
கொழும்பு.

சுதந்திரன்
THE "SUTANTIRAN"
194 ஏ, தட்டாரத் தெரு, கொழும்பு.
போன்: 3411.
சர்வஜித்து ஹ கார்த்திகை மீ 26உ
வியாழக்கிழமை

விசாரணைவேண்டும்!

சென்றவாரம் திங்கட்கிழமை வரவு-செலவுத் திட்டப் பிரதிநிதிகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. அடுத்தநாள் விவாதத்தின்போது காலிப் பிரதிநிதி திரு தஹநாயக்கா அத்திட்டத்தில் உள்ள சில வரி உயர்வுகள் பத்திரிகை ஒன்றில்முன்கூட்டியே வெளிவந்ததாகப் புகார் சொன்னார். அப்புகாரை நேற்று முன்தினம் நியமன அங்கத்தவர் மேஜர் ஓல்ட் வீல்ட் வலுப்படுத்தியிருக்கின்றார். மேஜர் ஓல்ட் வீல்ட் பத்திரிகை மீதாவது அல்லது வேறு எவர் மீதாவது இக்குற்றச்சாட்டை சுமத்தவில்லை ஆனால் வரவு செலவுத் திட்டம் சபையில் சமர்ப்பிக்கப்படுவதற்கு ஐந்து ஆறு தினங்களுக்கு முன்பதாக அதிலுள்ள இரகசியம தெரிந்துவிட்டதாக அழுத்தந்திருத்தமாகக் கூறியிருக்கிறார். 'விஸ்கி, பீர், புகையிலை, மோட்டார் கார் வரி உயர்வுகளின் முழு விபரங்களும் முன்கூட்டியே பகிரங்கமாகப் பேசப்பட்டன" என்றும் சொல்லியுள்ளார்.

சமீபத்திலதான் பிரிட்டிஷ் நிதிமந்திரி இவ்விதமான ஒரு குற்றச்சாட்டுக் கூறிய மறுநிமிஷமே தமது பதவியைத் துறந்தாரும். அச்சம்பவத்தின் பின் இலங்கையில் மேஜர் ஓல்ட்வீல்டின புகார்கள் வருவது நல்லதன்று மேஜரின் குற்றச்சாட்டு பாரதூரமானதாகும். அவரும் அவ்விதமே கூறியிருக்கின்றார் இவ்விதம் எதிர்காலத்திலாவது நடைபெறுவண்ணம் தடைசெய்வதற்காக பூரண விசாரணை நடத்த வேண்டுமென்றும் யோசனை சொல்லியிருக்கிறார். இந்த வரி உயர்வுகளையிட்டு தமக்குத் திட்டமான அறிவித்தல் இருந்ததாம்; ஆகவே விசாரணை நடத்தப்பட்டால் தாம் வேண்டிய உதவியைச் சந்தோஷத்துடன் அளிக்கத் தயார் என்றும் சபையில் குறிப்பிட்டிருக்கிறார்.

உள்நாட்டு நிர்வாகப் பொறுப்பை இலங்கை மந்திரிகள் மிகவும் சமீபத்தில் பெற்றவர்களாவர். பாராளுமன்றத் தேர்தலின்போது இன்று மந்திரிகளாயிருப்பவர்கள்மீது பலவிதமான புகார்களும் கூறப்பட்டன. அவற்றைத் தொடர்ந்த அரசாங்கத்தின்மீது இவ்வித புகார் அரச மன்றத்தில் வந்தும் நடவடிக்கைகள் எடுக்காதிருப்பது முறையாகாது. வரி உயர்வுகள் முன் கூட்டியே வெளிவந்துள்ளனவா என்பதை தீர்க்கமாக விசாரிக்க வேண்டும். இப்புகாரின் உண்மையை அறிவதற்கு அரசாங்கம் உடனே ஒரு கமிஷனை நியமிக்க வேண்டும். மேஜரின் பேச்சிலிருந்து அவர் கூறிய புகார்களுக்குத் தக்க ஆதாரம் உண்டு என்றே நாம் நம்ப வேண்டியிருக்கிறது. இந்த நிலைமையில் விசாரணை ஏற்படுத்தத் தவறினால், தான் கெட்டகுரங்கு தபோவனத்தையும் அழித்ததாம் என்றுதான் பொதுமக்கள் சொல்லுவார்கள்.

பிரிட்டிஷ்காரருக்கு வாழ்க்கைப்பட்ட இலங்கைப்பெண்

'கறுப்பி'எனக் கூறி மனைவியைத் துன்புறுத்தினாராம்

விவாகரத்து அனுமதிக்கப்பட்டது

கொழும்பு, டிச, 10

கொள்ளுப்பிட்டி வாசியான ஸ்ரீமதி ஜீன்பட்ரீஷியா ஹியூள் என்பவர் தமது கணவர் சார்ஜன்ட் ஜியோப்ரே கென்ட்ரிக் ஹியூளிடம் இருந்து விவாகரத்துக் கோரி ஓர் வழக்குத் தொடர்ந்துள்ளார்.

ஸ்ரீமதி ஹியூளின் வாக்குமூலம் பின்வருமாறு:-

"நான் எதிரியை 1942 அக்டோபர் 24ல் மணம் புரிந்தேன் எனக்கு ஒருமகன் இருக்கிறான். கலியாணத்திற்குச் சில நாட்களின் பின் எங்களிடையே சச்சரவுகள் ஏற்படலாயின எதிரி குடித்துவிட்டு என்னிடம் கொடூரமாகநடந்து கொள்வார். தமது பெல்டினாலும் கைகளினாலும் அடிப்பதும் உதைப்பதும் வழக்கமாகியது ஒரு தடவை எனது கழுத்தை நெரித்ததும் உண்டு. அவதூறும் வெறுப்பும் நிறைந்த வார்த்தைகளால் திட்டுவதும் அவர் வழக்கம். என்னை அவர் படத்திற்கு அழைத்துச் செல்வதில்லை. காரணமாக ஒரு 'கறுப்பி'யுடன் தன்னை மற்றவர் காண்பதை தான் விரும்பவில்லை எனக் கூறி இருக்கிறார் அவர் என்னுடன் உட்கார்ந்து உணவு அருந்துவதில்லை. ஏனெனில் அசங்கியமான எங்கள் உணவைக் காண அவருக்குப் பிடிப்பதில்லை என்று அவர் கூறினார். நான் கறியும் சோறும் சாப்பிடுவதை அவர் விரும்பவில்லை. எங்கள் வீட்டு முற்றத்தில் நான் அவரைப் பொதுமகளிருடன்பார்த்திருக்கிறேன் அவர் குடிவெறியில் இருப்பதால் எனது எதிர்ப்புகளை அவர் கவனிக்க முடிவதில்லை தனது தவறான நடத்தைக்காக அவர் வருந்துவதும் கிடையாது தனது குழந்தை சம்பந்தமாகவும் அவர் கவனம் எடுப்பதில்லை. ஒரு சமயம குழந்தையின் தொட்டிலுள் தனது சப்பாத்தை வீசி எறிந்தார். இன்னோர்தடவை குழந்தைக்கு சுகயீனம் ஏற்பட்ட போது நான் டாக்டருக்குச் சொல்லி அனுப்பினேன். அப்போது அவர் ஓர் கறுப்பு டாக்டர் வருவதை ஆட்சேபித்து ஒரு ராணுவ டாக்டரை அழைத்து வரப் புறப்பட்டார். பின் இரண்டு நாட்களுக்கு அவர் திரும்பவில்லை."

"1914 ஆகஸ்டில் அவர் மத்திய கிழக்குக்குப் புறப்பட்டார். 1947 செப்டம்பரில் ஒரு நாள் இரவு குடிவெறியோடு அவர் திரும்பினார். "கதவைத் திறக்காவிட்டால் அதனை உடைத்துவிடுவதாக அவர் பயமுறுத்தினார்." எதிரி ஹியூள் பிரிட்டிஷ் ராணுவத்தைச் சேர்ந்தவர் என்றும் கூறப்பட்டது. அவர் விவாகரத்து மனுவை ஆட்சேபிக்கவில்லை.

நீதிபதி ஸர். பிரான்ஸிஸ் சூட்ஸ் விவாகரத்தை அனுமதித்ததோடு மாதம் ரூபா 60 தனது குழந்தையின் பராமரிப்பிற்காக கணவர் கொடுத்து வரவேண்டும் என்றும் தீர்ப்பளித்தார்.

இராணுவ ஸ்தாபனங்களின் தொழிலாளர்கள்

சம்பள உயர்வுக்குக் கிளர்ச்சி

கொழும்பு, டிச. 10

தரைப் படை, கடற் படை விமானப்படை ஆகிய ஸ்தாபனங்களில் வேலை செய்யும் தினசரி சம்பளம் பெறும் சாதாரண தொழிலாளர்களின் சம்பள விஷயங்கள் சம்பந்தமாக கூட்டு நடவடிக்கை எடுப்பதுபற்றி ஆலோசிக்க இந்த ஸ்தாபனங்களின் தொழிலாளர் பிரதிநிதிகளடங்கிய ஒரு மகாநாட்டை கூட்டுவதென கடற்படை தொழிலாளர் தொழிற் சங்கக் கூட்டத்தில் நேற்று முன்தினம் தீர்மானிக்கப்பட்டது. இலங்கை அரசாங்கத்தின் தொழிலாளர்களுக்கு சம்பளம் வழங்கப்படுவதுபோல அதே சம்பளத் திட்டத்தைப்போன்ற சம்பளத் திட்டம் தமக்கு வகுக்கப்பட்டு சம்பளம் கொடுக்கப்பட வேண்டுமென இத்தொழிலாளர் கிளர்ச்சிசெய்கின்றனர்.

இலங்கைக்கு கருவாடு ஏற்றுமதி

மூன்று அரசாங்கங்களின் மகாநாடு

சென்னை, டிச 8

டிசம்பர் 4-ம் தேதி வியாழக்கிழமையன்று சென்னையில் கூடிய தென் பிரதேச மீன் துறை அதிகாரிகள் மகாநாட்டில் டி பிரதேசத்தில் தயாராகும் கருவாடு ஏற்றுமதி பற்றி ஆலோசிக்கப்பட்டது. சென்னை தொழில் வர்த்தக டைரக்டரும் மீன் துறை கடல் துணை டைரக்டரும், திருவிதாங்கூர் சர்வகலாசாலையைச்சேர்ந்த கடற் பிராணி சாஸ்திர மீன் துறை பேராசிரியரும், கொச்சி சமஸ்தான மீன் துறை இலாகா சூப்பரின்டென்டெண்டும் சென்னை வெளிநாட்டு வர்த்தகக் கட்டுப்பாட்டு ஏற்றுமதி உதவி அதிகாரியும் அம்மகாநாட்டில் கலந்துகொண்டனர் பிரதேச உணவுக் கமிஷனர் தலைமை வகித்தார்.

1948 ஜனவரி முதல் மார்ச் வரையிலுள்ள கால அளவில் இலங்கைக்கு ஏற்றுமதி செய்வதற்காக சென்னை சர்க்காருக்கு ஒதுக்கப்பட்டுள்ள கருவாட்டின் அளவை அதிகப்படுத்த வேண்டுமென்று அம்மகாநாடு சிபார்சு செய்தது. இறால் சம்பந்தமாக விதிக்கப்பட்டுள்ள ஏற்றுமதித் தடைகள் எல்லாவற்றையும் எடுத்துவிடவேண்டுமென்றும் சிபார்சு செய்யப்பட்டது. சென்னை சர்க்காரும் கொச்சி சர்க்காரும் இலங்கைக்கு ஓரளவு இறால் ஏற்றுமதி செய்வதை அனுமதிக்கவேண்டுமென்றும், பர்மாவுக்கு திருவிதாங்கூர் ஏற்றுமதி செய்யும் இறாலின் அளவை அதிகப்படுத்தவேண்டுமென்றும் அங்கிருந்து இலங்கைக்கு ஏற்றுமதி செய்யப்படும் இறாலின் அளவை அதற்கேற்பக் குறைத்துவிடவேண்டுமென்றும் வேறு சில சிபார்சுகள் செய்யப்பட்டன.

சென்னை, திருவிதாங்கூர், கொச்சி ஆகிய இடங்களிலிருந்து கருவாடு ஏற்றுமதி செய்யப்படுவதை ஒருமுகப்படுத்துவதற்காக, மூன்று சர்க்கார்களின் பிரதிநிதிகளும் பிரதேச உணவுக் கமிஷனரின் அல்லது அவரது பிரதிநிதிகளின் தலைமையின்கீழ் மூன்று மாதத்துக்கு ஒருமுறை கூட்டம் கூடுவது நல்லது என்று அம்மகாநாடு கருதியது.

பிரிட்டனின் நிலை குலைவுக்குக் காரணம்

நிலக்கரி உற்பத்திக் குறைவு

வாஷிங்டன், டிச. 9

"பிரிட்டிஷ் நிலக்கரிச் சுரங்க சொந்தக்காரரும் தொழிலாளரும் சென்ற காலங்களில் இயந்திரங்களையுபயோகிக்கப் பின்னின்றதால் இப்போ அவர்களுடைய சாம்ராஜ்யமே நிலைகுலைகிறது" என அமெரிக்க சுரங்கத் தொழிலாளருடைய தலைவராகிய திரு. ஜோன் லூயி இன்று கூறினார்.

பிரிட்டிஷ் தொழிலாளியின் ஒவ்வொரு டன் நிலக்கரிக்கும் அமெரிக்கத் தொழிலாளி ஆறு டன் கரி வெளியேற்ற முடிகிறதென்றும் ஆகவே பிரிட்டன் முன் வியாபாரம் செய்த இடங்களுக்கும் அமெரிக்காவே விநியோகம் செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது என அவர் அமெரிக்க வியாபாரக் கமிட்டிக்கு முன் சாட்சியமளிக்கையில் கூறினார்.

பிரிட்டனுக்கு துருக்கி தேச வான்கோழிகள்

ஸ்தாம்புல், டிச. 9

கிறிஸ்மஸ பண்டிகையை முன்னிட்டு துருக்கி தேசம பிரிட்டனுக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் வான்கோழிகளை அனுப்பும் என அங்காராவிலிருந்து ஒரு செய்தி கிடைத்தது. இவைகளை ஏற்றிச் செல்ல இக்கிழமைக்குள் விசேஷ விமானங்கள் ஸ்தாம்புலுக்கு வருமென எதிர்பார்க்கப்படுகிறது [ராய்ட்டர்]

கனவேகமான அபிவிருத்திக்கு

கைத்தொழில் திட்டங்கள்

புது டில்லியில் முக்கூட்டு ஒப்பந்தத்திற்கு ஏற்பாடு

தேயிலை மகாநாடு, சணல் ஏற்றுமதி, அரக்கு ஆராய்ச்சி சாலை

இந்தியா-பாகிஸ்தான் பாகப்பிரிவினைகள் எல்லாம் "பைசல்"

புதுடில்லி, டிச 9

இன்று இந்திய பாரளுமன்றத்தில் உதவிப் பிரதம மந்திரி சர்தார் வல்லபாய் படேல் பின்வருமாறு தெரிவித்தார்:-

இந்தியா பாகிஸ்தான் பிரிவினை சம்பந்தமாக ராணுவம் உட்பட எல்லா விஷயங்களிலும் பைசல் செய்வதில் இரு நாடுகளுக்குமிடையே பூரணமான ஒப்பந்தம் ஏற்பட்டுவிட்டது. இது விஷயம் பிரிவினை கவுன்ஸிலின் மத்தியஸத விசாரணை சபைக்கு அறிவிக்கப்படும். மத்தியஸ்த விசாரணை சபை ஆலோசனைக்கு விடப்பட்ட எல்லாப் பிரச்னைகளும் வாபஸ் பெற்றுக் கொள்ளப்படும். காஷ்மீர் பிரச்னை பிரிவினை கவுன்ஸிலுக்கு சம்பந்தப்பட்டதல்ல. என்றாலும் அது விஷயமாக ஒரு சமரச முடிவு செய்து விடவும் ஆவலுடனிருக்கிறோம்.

சமரசம் ஏற்பட்டுள்ள முக்கியமான விஷயங்கள் பின்வருமாறு:- (1) ஆகஸட் 14-ந்தேதிக்குப்பின் பிரிக்கப்படாதிருந்த ரொக்கப் பணம் (2) கடனின் வீதாசாரப்பங்கு (3) பொதுக் கடனில் பாகிஸ்தானுக்குள்ள [illegible] அது எவ்விதம் அடைப்பது என்பதைப்பற்றிய விஷயம் (4) ஸ்டெர்லிங நிதியின் வீதாரப்பங்கு (5) ராணுவ தளவாடங்கள் தொழிற்சாலைகள் பிரிவு.

காஷ்மீர் விஷயம்

லாகூர், டிச. 9

நேற்றிரவு இந்தியா பிரதம மந்திரி பண்டித நேருவும் பாகிஸ்தான் பிரதம மந்திரி லியாகத் அலிகானும் காஷ்மீர்பற்றி சம்பாஷித்தார்கள். சமரசமான முடிவு ஏற்படவில்லை இரு வாரங்களுக்கொருதடவை கூடும் கூட்டுப் பாதுகாப்பு கவுன்ஸிலில் அடுத்த தடவை கூடும்போது இப்பிரச்னை மீண்டும் விவாதிக்கப்படும்.

பாகிஸ்தான் பிரதம தளபதி நீங்குகிறார்

கராச்சி, டிச. 9

பாகிஸதான் பிரதம தளபதியான சர் பிராங்க் மெசர்வி ஜனவரி மாதத்தில் பதவியிலிருந்து விலகிக்கொள்வார் என்று தெரிகிறது. இவர் சென்ற யுத்தத்தில் இந்தியா, பர்மா, வட ஆப்பிரிக்காவில் சேவை செய்தவர்.

திரு. கிருஷ்ணமேனன் விளக்கம்

லண்டன், டிச. 9

இந்தியா ஹைகமிஷனர் கிருஷ்ண மேனன் இன்று பத்திரிகா நிருபர்களிடம் பின்வருமாறு தெரிவித்தார்:-

காஷ்மீர் தொல்லை சில மாதங்களில் தீர்ந்து விடும். படையெடுப்பு முறியடிக்கப்பட்டுவிட்டது. சில இடங்களில் பதுங்கியிருக்கும் எதிரிகளைக் கண்டுபிடித்து விரட்டுவதில் கொஞ்சம் கஷடம் இருக்கிறது. இந்திய விமானப்படை அரிய சேவை புரிகிறது. காஷ்மீரில் நடைபெறுவது ஹிந்து முஸ்லிம போராட்டமல்ல. மேற்கு எல்லையிலிருந்து வரும் மலை ஜாதியாருக்கும் காஷ்மீர் ராஜ்யத்திற்கும் நடைபெறும் போராட்டமாகும். இந்தியாவும் பாக்கிஸ்தானும் பொருளாதார பிணைப்புடையவையாக இருப்பதால் இரு நாடுகளின் பொருளாதார சுபீட்சத்தை இந்தியா விரும்புகிறது.

இன்னும் 12 மாதங்களில் ஹைதராபாத் பிரச்னை முற்றாக தீர்ந்து விடும்.

சமாதான காலத்தில் இந்தியா வைத்துள்ள ராணுவத்தின் தொகை 2 லட்சத்து 70 ஆயிரமாகும். இதை இரட்டிப்பாக்க முயற்சி நடைபெறுகிறது.

பலமுள்ள இந்திய கடற்படையும் அமைக்கப் படும். மூன்று பிரிட்டிஷ் யுத்தக் கப்பல்களை இந்தியா வாங்கும்.

இந்தியாவின் கைத்தொழில்

புதுடில்லி, டிச. 9

டிசம்பர் 15-ம் தேதி இங்கு நடைபெறும் இந்திய கைத்தொழில் மகாநாட்டில் முக்கியமான விஷயங்கள் விவாதிக்கப்படும். தொழிலாளர்களிடையேயிருந்து வரும் பல கோஷ்டிகளுக்கிடையே ஐக்கியமேற்படுத்த அவைகளின பிரதிநிதிகளடங்கிய ஓர் மகாநாடும் டிசம்பர் 18-ம் தேதி கூட்டப்படும். பண்டித நேரு இம் மகாநாடுகளைத் திறந்து வைப்பார். தொழிலாளர்-முதலாளிகளிடையே சமரசமேற்படுத்த முயற்சிக்கப்படும் இந்தியாவின் கைத்தொழில் அபிவிருத்திக்காக தொழிலாளி-முதலாளி-அரசாங்கங்கள் சேர்ந்து 5 வருட காலத்திற்கு ஒரு முக்கூட்டு ஒப்பந்தம செய்யப்படும் கைத்தொழில் தீவிரமாக அபிவிருத்தியடைவதற்கு வேண்டிய மார்க்கங்கள் வகுக்கப்பட்டு வசதிகளும் அளிக்கப்படும்.

தேயிலை

மார்ச்சு மாதத்திற்குப் பின் உலக தேயிலை ஒப்பந்தம் காலவதியான பின் மேலும் அதில் தொடர்ந்து சேர்ந்திருப்பதா என்பதைப்பற்றி ஆலோசிக்க டிசம்பர் 10-ம் தேதி கல்கத்தாவில் தேயிலைக் கைத்தொழில் மகாநாடு நடைபெறும். இந்த 15 வருஷத்திய சர்வ தேச ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ள நாடுகள் இந்தியா, இலங்கை, டச்சு கிழக்கிந்தியத் தீவுகள். இம்மகா நாட்டை வர்த்தக இலாக்கா காரியதரிசி திரு கே. ஸீ. செட்டூர் ஆரம்பித்து வைப்பார். கூட்டுக் காரியதரிசி எல். கே. ஜாவும் விஜயம் செய்வார். தேயிலை உற்பத்தி செய்யும் அசாம், மேற்கு வங்காளம், திருவாங்கூர் சமஸ்தானம் இவைகளின் பிரதிநிதிகளும் விஜயம் செய்வார்கள்.

சணல் ஏற்றுமதி

இந்தியா பாராளுமன்றத்தில் மந்திரி திரு. [illegible] பின்வருமாறு தெரிவித்தார்:- அந்நிய நாணய பரிவர்த்தனைக்கு வசதியாகவும் இந்திய கப்பல் கம்பெனிகளுக்கு அனுகூலம் ஏற்படும் வகையிலும் சணலும் சணல் சாமான்களும் ஏற்றுமதி செய்யப்பட ஏற்பாடாகியிருக்கிறது. ஏற்கெனவேயுள்ள ஏற்றுமதி வர்த்தகர்களுக்கு அனுமதியளிப்பதுடன் புதிய வர்த்தகர்களுக்கு 10 சத வீதம் கோட்டா ஒதுக்கப்பட்டுள்ளது. சணல் சாமான்களுக்கு இதுவரை 347 மனுக்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

கப்பல்கள் வாங்குக!

கப்பல் வர்த்தகம் நடத்த இந்திய கப்பல் கம்பெனிகள் கப்பல்களை வாடகைக்கு எடுப்பதைவிட கப்பல்களை விலைக்கு வாங்கிவிடவேண்டும். அவ்விதம் செய்ய சர்க்கார் உதவி செய்வார்கள்.

அகில உலக ஸதாபனமாகிறது

கல்கத்தா டிச. 9

ராஞ்சியிலுள்ள இந்திய அரக்கு ஆராய்ச்சிசாலையை உலக அரக்கு ஆராய்ச்சி ஸ்தாபனமாக்கிவிட இந்திய அரக்கு தீர்வைக் கமிட்டியார் முடிவு செய்திருக்கின்றனர்.

லண்டனிலுள்ள இந்தியாவின் அரக்கு ஆராய்ச்சி நிலையத்தை மூடிவிடவும் தீர்மானித்திருக்கின்றனர்.

விவசாயப் புள்ளி விவரம்

புதுடில்லி, டிச 9

உலக உணவு ஸ்தாபன பிரதிநிதி கூடிய சீக்கிரம் இந்தியாவுக்கு வந்து 1950-வது வருடத்திற்கு உலக விவசாயப் புள்ளி விவரங்கள் தயாரிக்க இந்தியாவில் புள்ளி விவரங்கள் சேகரிப்பதுபற்றி விவசாய மந்திரியை சந்தித்துப் பேசுவார்.

சேலையும் நகையும் இரவல் வாங்கிய பெண்

திருப்பிக் கொடுக்கவில்லை என வழக்கு

கொழும்பு, டிச. 9

ஸ்ரீமதி ரஸீமா பருக் என்னும் ஓர் மாது நம்பிக்கை மோசடி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளார். இம்மாது யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரென்றும், ஓர் முஸ்லிமுக்கு வாழ்க்கைப்பட்டவரென்றும் கூறப்பட்டது.

இதுசம்பந்தமாக கலாசாலை மாணவி செல்வி செல்வரத்னம் கூறியதாவது:-

செப்டம்பர் 30-ம் தேதி எதிரி வீட்டுக்கு வந்து ஸ்ரீமதி ஸ்ரீகந்தராஜா வீட்டைக் காட்டும்படி கேட்டார். தாம் ஸ்ரீமதி ஸ்ரீகந்தராஜாவின் ஓர் மைத்துனி என்று அவர் கூறினார் அத்துடன் தாம் அவரிடமிருந்து இரவல் வாங்கிய ஓர் புடவையையும் காட்டினார். ஒரு வாரம் கழித்து எதிரி வீட்டுக்கு வந்து ஒரு பங்களூர் சேலையை அடுத்தநாள் திருப்பித் தருவதாகக் கூறி வாங்கிச் சென்றார் ஆனால் அது திருப்பித் தரப்படவில்லை இன்னோர் தடவை ஒரு ஜோடி காப்பும, ஒரு மோதிரமும் அவர் என்னிடமிருந்து இரவலாகப் பெற்றுச் சென்றார் ஆனால் மூன்றும் திருப்பித் தரப்படவில்லை. இதன் காரணமாக எனது மாமனார் ஒருவர் போலிசாருக்குத் தகவல கொடுத்தார்

வழக்கு விசாரணை டிசம்பர் 17-ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

திரு. கிரிக்கு கங்காணிகள் வரவேற்பளித்தனர்

கொழும்பு, டிச 10

சில தினங்களுக்கு முன் ஹட்டனில் அர்ச். ஜோன் பொஸ்கோஸ் ஆங்கிலப் பாடசாலை மண்டபத்தில் இந்திய அரசாங்கப் பிரதிநிதி திரு வி. வி. கிரிக்கும் இந்திய அரசாங்க ஏஜென்ட் திரு. என். ஈ. எஸ். ராகவாச்சாரிக்கும் தலைமைக் கங்காணிகளால் வரவேற்பளிக்கப்பட்டது.

சந்திரநாகூருக்கு இந்திய ஸ்தானிகர்

சந்திரநாகூர் டிச. 9

பிரஞ்சு இந்தியாவில் இந்தியாவின் ஸ்தானிகராக நியமிக்கப்பட்டுள்ள ராஜித் அலி டெயிக் சென்ற வாரம் இங்கு வந்தார். நேற்று அவர் பேசிய போது, கூடிய சீக்கிரம் மக்கள் விரும்பினால் சந்திரநாகூர் இந்திய யூனியனில் சேர முடியுமென்றும சந்திரநாகூரை மேற்கு வங்காளத்துடன் சேர்ப்பதுபற்றி இந்திய சர்க்காருடன் கலந்து பேசப்போவதாகவும் தெரிவித்தார்.

தொழிலாளி மரணம்

புதுடில்லி, டிச 9

வாழ்க்கைத்தரப்படி உயர்வு கோரி பிர்லா நெசவாலையில மானேஜர் காரியாலயத்தின் முன்பு கூடிய தொழிலாளர்மீது போலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒருவர் மாண்டார்.

கமியூனிஸடுகள் கைது

மேற்கு வங்காளம், பம்பாய் அஸாம் முதலிய மாகாணங்களில் சென்ற இரு வாரங்களில் கமியூனிஸ்ட் புரட்சிக்காரர்களான 30 பேர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாக வங்க மாகாண கிசான் சங்கக் காரியதரிசி அறிவிக்கிறார்.

தூது வெற்றி

ரங்கூன், டிச 9

இந்தியாவுக்கு சமரச தூது சென்று திரும்பிய பர்மா அந்நியநாட்டு மந்திரி உ டின் டுட் பின்வருமாறு தெரிவித்தார்:-

எங்கள் தூது வெற்றிகரமாக முடிந்தது. ஜனுவரி 4-ந் தேதி சுதந்திரமடையும் பர்மாவுக்கும் சுதந்திர இந்தியாவுக்குமிடையே பரஸ்பரம் நல்லுறவு ஏற்படுத்தவேதூதுசென்றோம்.

பர்மா பிரதம மந்திரி கொலை வழக்கு

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரானார்

ரங்கூன், டிச. 8

பிரதம மந்திரி ஊ ஆங்சான் உட்பட ஏழு மந்திரிகளைக் கொன்ற கொலை வழக்கில் முதல் எதிரியாகிய மாஜி பிரதம மந்திரி ஊ சாவுக்காக பிரபல பிரிட்டிஷ் வழக்கறிஞர் திரு. டெரெக் கேர்டில் பெனெத் கே ஸி இன்று கோர்ட்டில் ஆஜரானார்.

நீதிபதி அவரை வரவேற்றார். ஜப்பானியர் ஆதிக்கத்தின் கீழ் பர்மா நிர்வாகத்தை நடத்திய பாமா என்பவரை எதிரி தரப்புச் சாட்சியாகக் கூப்பிடுவதை வழக்கை நடத்தும் வழக்கறிஞர் ஆட்சேபித்தார். அவர் கூறிய காரணம் பாமாவைக் கோர்ட்டுக்கு அழைத்துவர பல உயர்தர போலிஸ் உத்தியோகஸ்தர் தேவைப்படுமென்பதே.

ஆனால் எதிரி தரப்பார் தமது கட்சிக்கு பாமா சாட்சியம் அத்தியாவசியமென்றும் அவர் சாட்சியத்தால் ஊ சா என்றும் புரட்சிக்கெதிராகவே இருந்தாரென்று வெளிப்படுமென்றும் கூறினர். அத்துடன் சென்ற வருடம் போலிஸ் வேலை நிறுத்தத்தின் போது அவர்களின் தலைவராயிருந்த உவன் மோங் என்பவரையும் எதிரி தரப்புச் சாட்சியாக்க வேண்டுமென்றபோது அவரையும் பாதுகாவலுடன் கோர்ட்டுக்கு அழைத்துவர பலத்த போலிஸ் பந்தோபஸ்து வேண்டுமென்றும் வழக்காளி தரப்பார் கூறினர்.

எதிரிகளில் இருவர் தாங்கள் குற்றங்களை ஒப்புக்கொண்டனர்.

து கா என்னும் எதிரி தானே பிரஸ்தாப தினத்தன்று துப்பாக்கிப் பிரயோகம் செய்தவர்களை மந்திரி சபைக் கட்டிடத்துக்கு ஜீப் காரிலே கொண்டுபோய் திரும்ப ஊ சா வீட்டிற் கொண்டுபோய் விட்டவரென்பதை ஒப்புக்கொண்டார்.

கின் மோங் யின் என்பவர் தானே மந்திரி சபை கூடியிருக்கும் நேரம் பார்த்து ஊ சாவுக்கு டெலிபோன் மூலம் அறிவித்தவனென்பதை ஒப்புக்கொண்டார்.

ஸ்டெர்லிங் நிலைப்பேச்சுகள்

பிரிட்டனுக்கும் எகிப்துக்கும் கெய்ரோவில் ஆரம்பம்

கெய்ரோ, டிச. 8

நாளை தொடக்கம். பிரிட்டனும் எகிப்தும் தொடர்ந்து பேசி முடிவுசெய்யவிருக்கும் புதிய ஸ்டெர்லிங்ஒப்பந்தப்பேச்சுக்களின் அட்டவணையை இரு தேசப் பிரதிநிதிகளும் இன்று இங்கே கூடி ஒழுங்கு செய்தனர்.

இவ்வளவு காலமும் அமுல் நடந்த ஒப்பந்தம் இந்த வருடத்தோடு முடிவதால் 1948-ம் ஆண்டுக்கு அல்லது முதல் 6 மாதத்துக்கும் இன்னொரு ஒப்பந்தம் செய்யவேண்டியதவசியமாகும். (ராய்ட்டர்)

ஜெர்மனியின் பெரிய வெடிமருந்து உற்பத்திசாலை

12 நிர்வாகஸ்தர்கள் மீது வழக்கு

நியூரம்பர்க், டிச. 8

ஜெர்மனியின் ஆகப்பெரிய வெடிமருந்து உற்பத்தி சாலை கிறப் என்பவருடையதுதான். அத்தொழிற்சாலை நிர்வாகஸ்தர்கள் 12 பேருக் கெதிராக சென்ற யுத்தத்தின் போது அமைதியைக் குலைத்து, சூறைபாடி அடிமைத் தொழிலாளரை நிர்ப்பந்தப்படுத்திஇச்செய்கைகளைச் செய்வதற்கு உடந்தையாயுமிருந்தார்களென்பதே குற்றச்சாட்டு.

இப்போ ஒரு வருடத்துக்கு முன் கோயரிங முதலியோர் விசாரிக்கப்பட்டதும் இக்கோர்ட்டில்தான்.

இதில் பிரதானமான எதிரி இந்தத் தொழிற்சாலையை உற்பத்தியாக்கிய குஸ்ராவ் கிறப் என்பவரின்மகனாகிய அல்பிரட் கிறப் என்பவர். தகப்பன் இறந்த பிறகு இவர்தான் இப்போ தொழிற்சாலையின் தலைவர்.

படிப்படியாக நீக்கப்படும்

இந்தியாவின் உணவுக் கட்டுப்பாடு

புதுடில்லி, டிச. 10

இந்தியாவில் உணவுக் கட்டுப்பாட்டை படிப்படியாகநீக்க இந்திய சர்க்கார் தீர்மானித்திருக்கிறார்கள். அரசாங்கம் உணவுப் பங்கீடு முறைமைகளை ரத்து செய்யும் அதேசமயத்தில் அவசர உணவு இருப்புகளையும் சேமித்து வைப்பார்கள்.

வர்த்தகர்கள், உற்பத்தியாளர்கள், உபயோகிப்பவர்கள் இவர்களிடையே உணவுக் கட்டுப்பாட்டில் அதிருப்தி ஏற்பட்டதால் உண்டான அபாயகரமான பிரச்னைகளைச் சமாளிக்கவே அரசாங்கம் இவ்விதம் தனது உணவுக் கொள்கையை மாற்றிக் கொள்கிறது.

உள்நாட்டு உணவுப்பொருள் சேகரிப்பதில் குறைவு ஏற்பட்டு வருவதால் நிர்வாகஸ்தர்களுக்கு அதிக சிரமங்கள் ஏற்பட்டு வருகின்றன. இருப்பு குறைவதால பங்கீடு அளவையும் குறைக்கும்படி நேரிடுகிறது. வெளிநாடுகளிலிருந்து கிடைக்கும் கோட்டா நாட்டில் 12 அவுன்ஸ்வீதப் பங்கீடு கொடுப்பதற்கும் முடியாத நிலைமையில் குறைந்துவருகிறது. இறக்குமதிக்கு செலவு நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. அதனால் அரசாங்கத்தின் செலவு அதிகமாகிறது. அந்நிய நாணயப் பரிவர்த்தனைக்கும் கஷ்டமாக இருக்கிறது.

"விஹார மஹாதேவி" சென்னை பயணம்

இலங்கை - தென்னிந்திய விமானப் போக்குவரத்து ஆரம்பம்

கொழும்பு, டிச 10

இலங்கை அரசாங்கம் ஏற்படுத்தியுள்ள இலங்கை தென்னிந்தியா விமானப் போக்குவரத்து இன்று ஆரம்பிக்கப்பட்டது. 'விஹார மஹாதேவி இன்று காலை 8 மணிக்கு ரத்பலாஞ விமான நிலையத்திலிருந்து புறப்பட்டுச் சென்றது. அதில் காங்கேசன் துறை செல்லும் 7 பிரயாணிகளும் சென்னை செல்லும் 9 பிரயாணிகளும் பயணமானார்கள். விமானம் சென்னை சென்று இன்று மாலை திரும்புகிறது.

வீட்டு வாடகைக் கட்டுப்பாடு

பாராளுமன்றத்தில் கேள்வி

கொழும்பு, டிச. 11

இன்று நடைபெறும் பிரதிநிதிகள் சபைக் கூட்டத்தில் திரு பி. ஜி. பி. கெனமன் ஸ்தலஸ்தாபன மந்திரியை நோக்கி கீழ்க்கண்ட கேள்விகள் கேட்டார்:-

1941வது வருடத்திய அளவுக்கு வீட்டுவாடகையை முடக்கும் படியும் வீட்டுவாடகை கட்டுப்பாட்டுச் சட்டத்தைத் திருத்தும்படியும், கொழும்பு நகரசபை நிறைவேற்றிய தீர்மானத்தின் மீது ஸ்தலஸ்தாபன மந்திரி என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்? ஒரு நடவடிக்கையும் எடுத்திராவிடில் வீட்டு வாடகைகளைக் குறைக்க மந்திரி வேறு எவ்வித நடவடிக்கை எடுக்க உத்தேசித்திருக்கிறார்.

பிரெஞ்சு-ரஷிய தகராறு

வர்த்தக சமரசப் பேச்சு திடீரென முறிந்தது

லண்டன், டிச 9

பிரெஞ்சு அரசாங்கம் சோவியத் ரஷியா மீது துவேஷமான நடவடிக்கை எடுத்திருப்பதால் இன்று சோவியத் ரஷியா-பிரான்ஸ் வர்த்தக சமரசப் பேச்சு முறிந்தது. பிரான்ஸிலுள்ள சோவியத் யுத்த நஷ்ட ஈட்டுப் பொருள் கமிஷனை பிரான்ஸ் வெளியேற்றியதால் ரஷியாவும் ரஷியாவிலுள்ள பிரெஞ்சு யுத்த நஷ்ட ஈட்டுப் பொருள் கமிஷனை வெளியேற்றியது. ரஷ்யாவின் இவ்வித திடீர் நடவடிக்கை பிரெஞ்சு அரசாங்கத்திற்கு ஆச்சரியத்தை விளைவித்தது. இதைப்பற்றி பிரெஞ்சு பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை விவாதம் நடைபெறும் (ராய்ட்டர்

தூத்துக்குடி வெங்காயம்

2000 மூடை இன்று வரும்

கொழும்பு, டிச. 11

மூன்று மாத காலத்திற்குப் பின் இன்றுமுதல் இந்தியாவிலிருந்து வெங்காயம் வருகிறது. இன்று தூத்துக்குடியிலிருந்து ஏற்றுமதியான 2000 மூடை வெங்காயம் கொழும்பு துறைமுகம் வந்து சேரும் சென்ற மாதம் உணவு கமிஷனர் திரு கே. ஆள்வாப்பிள்ளை இந்தியா சென்று வெங்காயத்தின்மீது இந்திய சர்க்கார் ஏற்படுத்தியிருந்த தடையை தளர்த்துவதற்காக அங்குள்ள அதிகாரிகளைக் கலந்து பேசியதன் பயனாக இப்பொழுது இலங்கைக்கு இந்திய வெங்காயம் கிடைக்கிறது.

இம்மாதக் கடைசிக்குள் மொத்தம் 800 டன் வெங்காயம் இந்தியாவிலிருந்து வரும் இந்த வெங்காயம் கள்ள மார்க்கட் வர்த்தகர் கைக்குப் போகாமல் கூட்டுறவு சங்கங்கள் மூலம் விநியோகம் செய்ய ஏற்பாடு செய்யப்படும். இப்பொழுது கள்ளமார்க்கட்டில ஒரு ராத்தல் வெங்காயம் ரூ 1-75க்கு விற்கப்படுகிறது. சமீபத்தில் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து வந்த பெரிய வெங்காயம் இவ்வாரம் விநியோகிக்கப்பட்டு வருகிறது. கூட்டுறவு சங்கங்கள் பல கூட்டுறவு மொத்த விற்பனைசங்கத்தின்மூலம் அதை வாங்கிவருகிறார்கள். அதன் பயனாக சென்ற வாரம் ராத்தல 2 ரூபாய்க்கு கள்ள மார்க்கட் விலைக்கு விற்ற வெங்காயம் இப்பொழுது 65 சதமாகக் குறைந்திருக்கிறது.

ஆனந்தாக் கல்லூரி தமிழ் சங்கம்

கொழும்பு, டிச. 10

மேற்படி சங்கத்தின் ஆதரவின் கீழ் சென்ற திங்கட்கிழமை இரவு திரு ம. நாகரத்தினம் அவர்களால் இயற்றப்பட்ட "தீண்டாமை" என்னும் நாடகம் ஆனந்தா கல்லூரி மண்டபத்தில அவராலும் மற்றும் உபாத்தியாயர், மாணவ, மாணவிகளாலும் நடிக்கப்பட்டது. அவ்வமயம் கல்லூரி தலைமை ஆசிரியரும் மற்றும் ஆசிரியர்களும் உயர்தர நீதிமன்ற நீதிபதி திரு சி. நாகலிங்கம் அவர்களும் உணவுக் கமிஷன் திரு கோ. ஆழ்வாப்பிள்ளை அவர்களும் மற்றும் பல பெரியார்களும் சமூகமளித்து சிறப்பித்தார்கள். தலைமை ஆசிரியர் திரு எல். எச். மேத்தானந்தர் அவர்களும் தமிழ் ஆசிரியர் திரு ம. நாகரத்தினம் அவர்களும் கல்லூரியின் சார்பிலும் தமிழ் சங்கத்தின் சார்பிலும் நன்றி கூறி மென்மேலும் நாடகங்களை இயற்றி நடிப்பதற்கு உற்சாகம் ஊட்டுமாறு வேண்டிக்கொண்டார்கள்.

கிளாஸ்டர் கோமகன் இலங்கை வருவார்

பண்டிதர் நேருவும் வரலாம்

கொழும்பு, டிச. 10

அடுத்த பெப்ரவரி மாதம் இலங்கைக்கு பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துள் பூரண பொறுப்பாட்சி அந்தஸ்து கிடைக்கும் வைபவத்தை ஒட்டி கிளாஸ்டர் கோமகன் இலங்கை வருவார் என்றும் பாராளுமன்றத் திறப்பு விழாவை நடத்துவார் என்றும் தெரிகிறது.

இவருடன் இந்தியப் பிரதம மந்திரி பண்டித ஜவஹர்லால் நேரு, சோல்பரிப் பிரபு முதலியோரும் இவ்விழாவுக்குச் சமூகமளிப்பார்கள் என்று நம்பப்படுகிறது.

பிரிட்டிஷ்-ரஷியா வர்த்தகப் பேச்சு

மாஸ்கோ, டிச. 9

பிரிட்டனுக்கும் ரஷியாவுக்குமிடையே வர்த்தக சமரசப் பேச்சு நடைபெற்று வருகிறது. பிரிட்டிஷ் வர்த்தக மந்திரி வில்சன் ரஷிய அந்நியநாட்டு வர்த்தக மந்திரி மிக்கோயனை இன்று சந்தித்துப் பேசுகிறார்.

திரு. வில்சன் நாளை லண்டனுக்குப் புறப்படுவார். அதன் பிறகு மாஸ்கோவிலுள்ள பிரிட்டிஷ் ஸ்தானிகர் பீட்டர்சன் வர்த்தகப் பேச்சைத் தொடர்ந்து நடத்துவார். (ராய்ட்டர்)

பறங்கியரின் உண்மையான தலைவன்

அவரைக் கொலை செய்ய முயன்றதாக புகார்

களுத்துறை, டிச 10

பெரிய ஆஸ்பத்திரியில் டாக்டராக வேலைபார்க்கும் ஒருவர் தம்மை அவரது காரினால் தட்டிக் கொல்ல முயன்றதாக நியாயதுரந்திரர் திரு. ஜே. இ எக்ஸ்டேல் ஓர் மாஜிஸ்டிரேட் முன்னிலையில் புகார் செய்துள்ளார்

திரு. ஓர் கூறியதாவது:-நவம்பர் 30 ம தேதி நான் ரயில்வே ஸ்டேஷனில் இருந்து புறப்பட்டுக் கொண்டிருந்தபோது, பின்னால் இருந்து வந்த ஒரு கார் என்னைத் தட்டி வீழ்த்தியது அப்போது காரில் இருந்த ஒருவர் 'ஓர்தான் என்னைக கெடுத்தவன்" என்று குறிப்பிட்டார் அத்துடன் பக்கத்தில் உள்ளவர்கள் நியாயதுரந்திரர் ஓர் என்று கூறியதும் என்னை டிரைவர் தொடர்ந்து நெரித்துச் சென்றார்.

அதன் பின் நான் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டேன். நான் டச்சுப் பறங்கியர் சார்பில் பிரதிநிதிகள் சபையிலும் செனெட்டிலும் அங்கத்துவம்கோரி விண்ணப்பித்திருந்தேன். இதனாலேயே டிரைவர் இங்ஙனம் நடந்துகொண்டார்

எங்கள் சமூகத்தின் சார்பில் பாராளுமன்றத்தின் இருசபைகளிலும் அங்கத்தினர் இருந்தபோதிலும், நானே எங்கள் சமூகத்தின் உண்மையான தலைவனுவேன்.

மாஜிஸ்டிரேட் போதியசாட்சியமில்லாததால் கொலை முயற்சிக்குற்றச்சாட்டைஅனுமதிக்கவில்லை. வழக்கு போலிசார் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டுள்ளது.

ஹட்டன் நகரசபைத் தேர்தல் எதிரொலி

எழுவர் மீது வழக்கு

ஹட்டன், டிச 9

ஹட்டன், டிக்கோயா நகரசபைத் தேர்தல் சம்பந்தமாக ஓர் வழக்கு இங்கு தொடரப்பட்டுள்ளது. இதில் ஏழுபேர்கள் பொல்லுகள், போத்தல்கள் முதலிய அபாயகரமான ஆயுதங்களைத் தரித்திருந்ததாகவும், நகரசபைத் தலைவர் திரு அந்தோனி ஜே எம். டி சில்வாவைத் தாக்கிக் காயம் விளைக்கத் திட்டமிட்டதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர்.

எதிரிகள் தாம் குற்றவாளிகள் அல்ல எனக் கூறினர். மாஜிஸ்டிரேட் ஜனவரி 12-ம் தேதிக்கு வழக்கைஒத்திவைத்து தலைக்கு 500 ரூபா பிணையில் எதிரிகளை விடுதலை செய்தார்

பொதுமக்களுடன் கண்ணியமாக நடவுங்கள்

தொழில் மந்திரியின் நிரந்தரக் காரியதரிசியின் சுற்றறிக்கை

கொழும்பு, டிச. 10

போக்குவரத்து மந்திரியின் நிரந்தரக் காரியதரிசி திரு. ஜே என். ஆறுமுகம் தொழில் மந்திரியின் இலாகாக்களின் தலைவர்களுக்கு அனுப்பிய சுற்றறிக்கை ஒன்றில் தொழில் மந்திரியின் காரியாலயங்களுக்கு வரும் பொது மக்களுடன் கண்ணியமாக நடந்து கொள்ளும்படியும் சில சந்தர்ப்பங்கள் மந்திரிக்கு மன வெறுப்பைக் கொடுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பாவுக்கும் சீனுவுக்கும் அமெரிக்க பண உதவி

வாஷிங்டன், டிச. 9

அமெரிக்க பிரதிநிதி சபையில் இப்போ 4 நாட்களாக விவாத நடக்கும் ஐரோப்பாவுக்கும் சீனுவுக்கும் 590 கோடி டாலர் கடன் கொடுத்துதவும் மசோதா இன்று ஓர்முடிவுக்கு வருமென நம்பப்படுகிறது. முடிந்தவுடன் இருசபை பிரதிநிதிகளும் பரிசோதனை செய்தவுடன் தலைவர் ட்ருமனின் கைச்சாத்துக்கு அனுப்பப்படும்.

இந்த மசோதாவின்படி ஐரோப்பாவில் பிரான்ஸ் இத்தாலி, ஆஸ்டிரேலியா என்னும் 3 நாடுகளுக்கும் 530 கோடி டாலரும் சீனுவுக்கு 60 கோடி டாலருமாகப் பகிரங்கப்படுமாம். (ராய்ட்டர்)

நாக விகாரைக்கருகே சினிமா

கட்டப்படுவதற்கு யாழ்ப்பாண பௌத்தர்கள் எதிர்ப்பு

யாழ்ப்பாணம், டிச 10

யாழ்ப்பாணத்தில் உள்ள ஸ்ரீநாக விகாரை என்னும் பௌத்தாலயத்திற்கருகே ஒரு சினிமா மண்டபம் கட்டப்பட்டிருக்கிறது. இது இங்குள்ள பௌத்த மக்களின் பலத்த கண்டனத்துக்காளாகி உள்ளது.

இது சம்பந்தமாக நாக விகாரையில் ஒரு பொதுக் கூட்டம் நடத்தப்பட்டது. இக்கூட்டத்திற்கு பௌத்த வாலிபர் சங்கத் தலைவர் டபிள்யூ பி. மார்தெலிஸ தலைமை வகித்தார்.

டி. என். பீரிஸ் கூட்டத்தின் நோக்கத்தைக் கூறி யாழ்ப்பாணம் நகர சபை, ஸ்தலஸ்தாபன மந்திரி, பாராளுமன்ற அங்கத்தினர் ஆகியோரை மத வழிபாட்டுக்குரிய இடங்களுக்கு அருகாமையில் கேளிக்கை மண்டபங்கள், கள்ளுக் தவறணை, பகிரங்க சந்தைகள் ஆகியவற்றை திறந்து வைப்பதை தடைசெய்ய வேண்டுமென்று வேண்டிக்கொண்டார்.

நகரசபை அங்கத்தினர் எஸ பி. நடராஜா யாழ்ப்பாணத்தில் உள்ள பௌத்தர்களுக்கு இது சம்பந்தமாக தனது அனுதாபமும், ஆதரவும் உண்டு எனக் குறிப்பிட்டார்.

திரு எஸ. நாதன் கோவில்கள், தேவாலயங்களுக்கு கால் மைலுக்குள்ளாக சினிமா மண்டபங்களைக் கட்டுவதற்கு அனுமதிப்பதை ஆட்சேபித்து, இதனைத் தடைசெய்யச் சட்டம் வேண்டும் எனக் கூறினர்.

திரு நெல்சன் சில்வா யாழ்ப்பாண பௌத்தர்கள் இது விஷயமாக அதிக சிரத்தை எடுப்பதைப் பாராட்டினர். விகாரைக்கருகே சினிமா மண்டபம் கட்டப்படுவதை ஆட்சேபித்து ஓர் தீர்மானமும் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

ஆலயங்களுக்கு அருகே சினிமா

நிறுவுவதைத் தடுக்க முயற்சி

கொழும்பு, டிச. 10

சென்ற சனிக்கிழமை 40 பௌத்த சங்கங்களில இருந்து வந்த 70 பிரதிநிதிகளின் கூட்டம் ஒன்று நடைபெற்றது இக் கூட்டத்தின் நோக்கம் லயார்ட்ஸ் பிராட்வேயில உள்ள பௌத்தாலயத்திற்குச் சமீபம் ஒரு சினிமாத் தியேட்டர் கட்டப்படுவதை எதிர்ப்பதாகும்,

நீண்ட நேர ஆலோசனையின் பின்னர் மதவழிபாட்டுக்குரிய இடங்களுக்கு அருகாமையில சினிமாத் தியேட்டர்கள் கட்டப்படுவதைத் தடுக்கவேண்டும் என்று பாராளுமன்றத்திற்கு ஒரு மகஜர் சமர்ப்பிக்கத் தீர்மானிக்கப்பட்டது.

இது சம்பந்தமாக ஒரு கூட்டம் நடத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

இந்தோனேஷிய சமரசப் பேச்சு

பட்டேவியா, டிச. 9

டச்சு-இந்தோனேஷிய தகராறு சம்பந்தமாக பாதுகாப்பு கவுன்ஸிலின் யுத்த நிறுத்த உத்தரவு அமுல் செய்யப்படுவது பற்றி மூவர் கமிஷனும் இரு நாடுகளின்பிரதிநிதிகளும் நடத்தும் சமரசப்பேச்சில் அடுத்த வாரம் நெருக்கடியான நிலைமை ஏற்படுமென்று சொல்லப்படுகிறது.

இந்த சமரசப் பேச்செல்லாம் கண்துடைப்பு வேலைத்தனமென்று மாஸ்கோவில் வெளியாகும் ரஷிய பத்திரிகைகள் அறிவிக்கின்றன.

வியன்னா, டிச. 9

நாணய மாற்றில் திருத்தங்கள் நாளை அமுலுக்கு வருவதாலும் அததிருத்தங்களின்படி பழைய 3 சிலிங் நோட்டுக்குப் பதிலாக ஒரு சிலிங் நோட்டே கொடுக்கப் போகிறபடியால் வியன்னா முழுவதும் இன்று கடன் கொடுத்தவர்கள் கடன் வாங்கியவர்களுக்கு ஒளித்தோ அல்லது கடனை ஆறுதலாகக் கொடுக்கும்படியோ மன்றாடிய வண்ணமாயே திரிவது ஓர் விபரீதமாக இருக்கிறது.

தென் திசையில் தோன்றும் வால் நட்சத்திரம்

தென் ஆஸ்திரேலியா, தென் ஆப்பிரிக்கா, தென் அமெரிக்காவில் தென்படுகிறது

லண்டன், டிச. 10

சாதாரண நட்சத்திரங்களை விட 4 மடங்கு பெரியதும் செங்குத்தான வாலையுடையதுமான மிகவும் பிரகாசமுள்ள நட்சத்திரம் தென் திசையில் தென்படுகின்றது. தென் ஆஸ்திரேலியா, தென் ஆப்பிரிக்கா, தென் அமெரிக்காவிலுள்ள வான சாஸ்திரிகளும் மற்றவர்களும் அதைப் பார்த்தனர். அது தோன்றிமறைகின்றதாம்.

பிரஞ்சு வேலைநிறுத்தம் முடிவு

பாரிஸ், டிச 9

மூன்று வாரங்களுக்குமேல நடைபெற்று வந்ததும பிரஞ்சு அரசியலில் ஒரு பெரிய நெருக்கடியை உண்டுபண்ணியதுமான 20 லட்சம் தொழிலாளர் வேலைநிறுத்தத்தை ரத்து செய்து தொழிலாளர்களை நாளை முதல் வேலைக்குத் திரும்பும்படி தொழிற் சங்கம் கட்டளை பிறப்பித்துள்ளது. ஆனுல் தொழிற்சங்கத்திற்கும் அரசாங்கத்திற்குமிடையே சமரசம்ஏற்பட்டிருப்பதான எவ்வித தகவலும் கிடையாது. மாஸ்கோவின உத்தரவின்மீது இவ்வேலை நிறுத்தம் நிறுத்தப்பட்டிருப்பதாக சில வலது சாரிப் பத்திரிகைகள் எழுதுகின்றன.

பிரான்ஸ ஒரு அரசியல் வெற்றியைப் பெற்று விட்டதென லண்டன் நால்வர் மகாநாட்டுக்கு வந்துள்ள பிரஞ்சு அந்நிய நாட்டு மந்திரி தெரிவித்தார். (ராய்ட்டர்)

பிரிட்டிஷ் ராணியின் வளர்ப்புப் புதல்வன் அடாத செயல்

லண்டன், டிச. 8

விமான அதிகாரி வில்லியம் காவெண்டிஷ பெண்டிக் போலந்திலிருந்த மாஜி பிரிட்டிஷ ஸ்தானிகரின் மகன். அவர் ராணியின் வளர்ப்புப் புதல்வராக இருந்தார். அதிகாரிக்கு அடாத செயல்களைப் புரிந்ததாக, அவர் பிரிட்டிஷ அரசாங்கத்தில் எவ்வித உத்தியோகத்திலும் அமர்த்தப்படலாகாதென்று தீர்ப்பளிக்கப்பட்டு வேலையிலிருந்து நீக்கப்பட்டார். (ராய்ட்டர்)

இலங்கைக்கு இளவரசியின் செய்தி

திருமண வாழ்த்துக்குப் பதில்

கொழும்பு, டிச. 10

இளவரசி திருமணத்திற்கு மேதகு இலங்கைக் கவர்னர் அனுப்பிய வாழ்த்துச் செய்திக்கு குடியேற்றநாட்டு மந்திரி கீழ்க்கண்ட பதிலை அனுப்பியுள்ளார்:-

"1947 நவம்பர் 18-ம் தேதி நீங்கள் அனுப்பிய செய்தி இளவரசி எலிஸபெத் முன் சமர்ப்பிக்கப்பட்டது. மாட்சிமை தங்கிய இளவரசி அச்செய்தியைச் சந்தோஷத்துடன் ஏற்றுக்கொண்டு அந்த வாழ்த்துச் செய்தியை அனுப்பியமைக்காக தனது ஆழ்ந்த மகிழ்ச்சியைத் தங்களுக்கும் தங்கள் மூலம் பிரதமர், மந்திரிமார், இலங்கைப் பொதுமக்கள் ஆகியோருக்கும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறார்."

கைதிகளின் உண்ணாவிரதம்

வாஷிங்டன், டிச. 9

அமெரிக்க தலைவர் ட்ருமனின் உணவுச் சேமிப்புத் திட்டத்தின்படி செவ்வாய்க்கிழமைகளில் இறைச்சியில்லாமலும் வியாழக்கிழமைகளில் முட்டையில்லாமலும் உணவு கொடுப்பதால் மக்னல் தீவிலுள்ள அமெரிக்க சிறையிலுள்ள 1300 கைதிகளில் 500 பேர் உண்ணாவிரதம் அனுஷ்டிக்கிறார்கள். [ராய்ட்டர்]

இலங்கை சுதந்திர மசோதா

லண்டன், டிச. 9

இலங்கை சுதந்திர மசோதா இன்று யாதொரு திருத்தமோ விவாதமோயின்றி லார்டு சபையில் கமிட்டி முறையாக நிறைவேறியது. இனி லார்டு சபையில் இம் மசோதா மூன்றுவது தடவையாக நிறைவேற்றப்பட்டதும் மன்னர் அங்கோரப் பெற்றுச் சட்டமாகிவிடும்.

லண்டன், டிச. 9

இன்று நடைபெற்ற நான்கு அந்நிய நாட்டு மந்திரிகள் மகாநாட்டில் ஜெர்மன் பொருளாதார நிலைமை பற்றி விவாதம் நடைபெற்றது. விவாத நடவடிக்கைபற்றி 14 தினங்களாக ஏற்பட்டிருந்த தகராறுக்குப் பின் இன்றுதான் முதன் முதலாக உருப்படியான விவாதம் நடைபெற்றது. [ராய்ட்டர்]

பாலஸ்தீனப் போராட்டம்

அராபிய லீக் கூட்டத்தில் ஆலோசனை

டெல் அவிவ்-ஜாபா யுத்த நிலைமை

ஜெருசலேம், டிச. 9

டெல்-அவிவ் நகருக்கும் ஜாபா நகருக்குமிடையே நேற்று நடைபெற்ற பீரங்கி யுத்தத்தில் 12 அராபியர்களும் 6 யூதர்களும் மாண்டனர். கண்டால் சுட்டுதள்ளும்படி பிரிட்டிஷ் துருப்புகளுக்கு உத்தரவிட்டு மாலை முதல் காலை வரை இங்கு ஊரடங்குச் சட்டம் பிரயோகிக்கப்பட்டிருக்கிறது.

அராபியலீக் கூட்டம்

கொய்ரோ, டிச. 9

அராபிய லீக் கவுன்ஸில் இன்று மீண்டும் கூடி அராபிய துருப்புகளுக்கு ஆயுதங்களை எங்கிருந்து விலைக்கு வாங்குவது என்பதுபற்றி ஆலோசனை செய்தது. 7 அராபிய நாடுகள் ஒவ்வொன்றும் எவ்வளவு பண உதவி செய்வது என்பதுபற்றியும் ஆலோசனை நடைபெற்றது.

வட ஆப்பிரிக்காவிலிருந்து எகிப்து வழியாக அராபியத் தொண்டர்களைக் கொண்டுவருவதுபற்றி ரிவ் தலைவர் அராபிய லீக் காரியதரிசியுடன் சம்பாஷித்தார். நாளை நியூயார்க்கிலிருந்து இங்கு வந்து சேரும் சவூதி அரேபியா அந்நிய நாட்டு மந்திரியான எமிர் பெய்சலிடம் அராபிய லீக்கின் முடிவுகள் சமர்ப்பிக்கப்படும்.

பிரிட்டன் வெளியேறியபின் முப்தி தலைமையில் பாலஸ்தீன அராபிய சர்க்கார் நிறுவுவது என்றும் அராபிய லீக் தீர்மானித்தது.

1500 பாலஸ்தீன அராபியர் சிரியாவில் ராணுவப் பயிற்சி பெற்று பாலஸ்தீனத்திற்கு வந்து பல பாகங்களில் இருந்து வருகிறார்கள்.

உலக தொழிலாளர் சங்கத்தின் ஆசியா கிளை

சிங்கப்பூர், டிச. 10

அடுத்த வருடம கல்கத்தாவில் உலகத் தொழிலாளர் மகாநாடு நடைபெறும்போது உலகத் தொழிலாளர் சம்மேளனத்தின் கிளை ஸ்தாபனம் ஆசியாவில் நிறுவப்படும் என்று இன்று இங்குவந்துள்ள ஆஸ்திரேலிய தொழிலாளர் சங்கத் தலைவர் தோர்ன்டன் தெரிவித்தார். இது சிங்கப்பூரில் நிறுவப்படும்.

போன்: 4063 கிராம்: "வேலவர்"

எமது சுதந்திர கிறிஸ்மஸ் வாழ்த்துகள்

நவ நாகரீக மோஸ்தர்களில் சுத்தப் பட்டில் தயார் செய்த சேலம், பெங்களூர், காஷ்மீர் சேலைகள், கைத்தறி நூல் சேலைகள், சேலம் பட்டுவேஷ்டி, சால்வைகள், இன்னும் இதர பட்டுநூல் ஜவுளி தினுசுகளும் விலை சகாயமாக கிடைக்கும் இடம்

"வேலவர்ஸ்"

வேலவர் ஸ்டோர்ஸ் லிமிடெட்
90, இரண்டாம் குறுக்குத் தெரு, கொழும்பு.

“வரவு செலவுத் திட்ட ரகசியம் வெளியானது உண்மையே!”

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தேசத்தின் உணவு உற்பத்தி விசியோகம் முதலியனவற்றுக்கு ஏராளமான பொருள் செலவிடப்பட்டுள்ளது. இந்த பணச் செலவுக்கு ஏற்ப இலங்கையை உணவுப் பொருட்கள் சம்பந்தப்பட்டது வரையில் சுயதேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதாக்க வேண்டும். உணவுப் பொருள்களுக்காக கடந்த காலத்தில அரசாங்கம் சுமார் 12 கோடியே 30 லட்சம் ரூபா நஷ்டமடைந்துள்ளது. அடுத்த சில மாதங்களில் இத்தொகை 22 கோடி ரூபாய்க்குமேல் அதிகரிக்கும். இந்த நஷ்டத்தை தேச வருமானத்தில் இருந்து தீர்க்கமுடியாது. சிறித சிறிதாகத்தான் தீர்க்க வேண்டி வரும்.

நாட்டுப் பகுதிகளில் மக்கள் வாழ்க்கை மிகமோசமாக இருக்கிறது. அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும். அவர்களது வாழ்க்கை நிலை உயர்த்தப்பட செய்யவேண்டியவைகள் எவ்வளவோ இருக்கின்றன. இந்த செலவுகளும் பட்ஜெட்டில் சேர்க்கப்பட்டால் செலவுப் பகுதியில் இன்னும் அதிகரிக்கும் நஷ்டங்களை இலலாமல் செய்தால்தான் அதிகரிக்கும் செலவைக் குறைக்க முடியும். இது சாத்தியமாக இல்லை.

இந்நேரத்தில் மாலை 4 மணியானதால் தேனீர் இடைவேளைக்கு சபை ஒத்திவைக்கப்பட்டது.

தேனீர் இடைவேளைக்குப் பின் திரு கே. கனகரத்தினம் தொடர்ந்து பேசியதாவது:-

குடியேற்ற நாட்டு நிர்வாக முறையிலிருந்து இப்பொழுது தேசிய நிர்வாகத்துக்கு வந்து கொண்டிருக்கிறோம். தேர்தல காலததிலே கிராமப் பகுதிகளுக்குச் சென்று நிர்வாகத்தை நாங்கள் எடுப்பதற்கு திட்டங்கள் தயாரிக்கின்றோம்; மக்களின் சுகாதாரம், உணவுப்பொருள்கள் முதலியவற்றைக் கவனிக்கப் போகிறோம்; வேலையில்லாப் பிரச்னைகளைத் தீர்க்கப் போகிறோம் என்றெல்லாம் கூறி வந்துள்ளோம். ஆனால் பாராளுமன்றத்துக்கு வந்ததும் பொதுச் செலவுகளைப் பொறுத்த அளவில் அதிருப்தியாகத்தான் நாங்கள் நடக்கிறோம். இலங்கை அரசாங்கம் அதிக மந்திரிகளை வைத்திருக்கிறது. அநேக மந்திரிகளை வைத்திருப்பதற்கு எவ்விதமான நியாயமுமிலலை. டம்பாயில் 2 கோடி மக்கள் வசிக்கின்றனர். ஆனால் அங்கு 13 மந்திரிகள்தான் இருக்கின்றனர். மததிய மாகாணத்தலே 9 மந்திரிகளும், 4 கோடியே 90 லட்சம் ஜனங்கள் உள்ள சென்னையில் 13 மந்திரிகளும் இருக்கின்றனர்.

ஒவ்வொரு மந்திரிமாருக்குப் ரூ. 1500 மாத விதம் கொடுக்கப்படுகிறது. அத்துடன் பிரதம மந்திரிக்கு படிச் செலவு மாத விதம் ரூ. 1500 கொடுக்கப்படுகிறது. மற்ற மந்திரிமாருக்கு ரூ. 500 படிச் செலவு கொடுக்கப்படுகிறது. இந்த படிச் செலவுகள் அதிகம்என்று நான் கூறவில்லை. மேலும் பாராளுமன்ற காரியதரிசிகள் வேறு நியமிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் அந்தரங்க காரியதரிசிகளும் புறம்பாக நியமிக்கப்பட்டுள்ளனர். எல்லோருக்கும் அதிக சம்பளம்கொடுக்க வேண்டியிருக்கிறது. வரிகொடுப்பவர்களே இந்த சம்பளத்தைக் கொடுக்க வேண்டியிருக்கிறது.

பொது அரசாங்க சேவையில் எத்தனையோ பதவிகள் புதிதாக ஆக்கப்பட்டுள்ளன.

அரசாங்க உத்தியோகஸ்தர் கமிஷன் அறிக்கையை அரசாங்கம் அதிவிரைவில் பிரசுரிக்க வேண்டும். சில குறிப்பிட்ட உத்தியோகங்களில் தொடர்பே இல்லை.

பல ஈட்டங்களில் அனுவசியமாக பணம் செலவாகின்ற அரசாங்க பண்ணைகளும் குடியேற்றத் திட்டங்களும் நஷ்டத்திலேயே நடத்தப்படுகின்றன. தேசிய அபிவிருத்தி ஸ்தாபனம் இன்று நடத்தப்படும் முறையில் பணம் வீண்விரையம் செய்யப்படுவதுதான் கண்ட மிச்சம். கூட்டுறவு இயக்கம் இன்று உலகம் முழுமையிலும் ஸ்திரம்பெற்று வருகின்றது. கடந்த நான்கு வருடங்களில் உணவுப் பொருள் கொள்வனவில் ஏற்பட்ட நஷ்டங்களை சரிசெய்யக் கூடிய முறையில் பட்ஜெட்டில் செலவுகளைத் திருத்தியமைக்க வேண்டும்.

திரு எச். டி. இலட், சிரிவர்தன பேசுகையில் மீன்பிடித் தொழில் குடிசைக் கைத்தொழில் முதலியனவற்றின் அபிவிருத்தி முதலியனபற்றியும் மீன்பிடித் தொழிலில ஈடுபட்டோருக்கு உதவி யளிப்பதுபற்றியும் கூறினர்.

திரு ஈ. எம். என். இரேஷியன் பேசுகையில் 9 கோடியே 70 லட்சம் ரூபா துண்டு விழுவதாக கூறப்பட்டுள்ளதென்றும் இது இலங்கைக்கு பாதகமானதென்றும் முதன்முறையாக இலங்கையின் இறக்குமதி சம்பந்தமான கணக்கு விபரம் முற்றாக தயாரிக்கப்பட்டுள்ளதென்றும் உணவுப் பொருள்கள் முதலியனவுககு அரசாங்கம் அளிக்கும் உதவிப் பணம் சபையில் அங்கீகரிக்கப்படவேண்டுமென்றும் பொது மக்களுக்கு சீனி விற்றுக் கிடைத்த லாபததினைக்கொண்டு அரிசி வாங்குவதற்கு அரசாங்கம் பண உதவி புரிந்ததென்றும், ஒரு பொருளின் இலாபத்தைக் கொண்டு வேறு ஒரு பொருள் கொள்வனவுக்குப் பண உதவி அளிப்பது சரியானதாவென்று தாம் கேட்க விரும்புவதாகவும் சுங்க இலாகா செப்டம்பர் முடிய தனது கணக்கைத் தயாரிததுள்ளதென்றும் தேசப் பொருளாதாரத் துறை முன்னேற்றத்துக்கு வெள்ளவத்தை- கல்கிசைத் தொகுதி அங்கத்தவரும் ஒத்துழைக்க வேண்டுமென்றும் மந்திரிமாரின் படிச் செலவுகள் பற்றியும், வெண்ணெய்க்கு அதிக வரி விதித்தது கூடாதென்றும் விஸ்கிக்கு அதிகம் வரி இன்னும் விதிக்கப்படலாமென்றும் தேசத்தின் ஏழை மக்கள் நிலைமையை உணரவேண்டுமென்றும் இலவசக் கல்வி பயிற்றவும் கூறினர்.

பளாங்கொடை பிரதிநிதி பேசுகையில் புது வரிகள் மத்திய வகுப்பினரைப் பாதிப்பதாகவும் தமது தொகுதியிலுள்ள குறைகள் பற்றியும் எடுக்கப்படவேண்டிய அபிவிருத்தி நடவடிக்கைகள் பற்றியும் கூறினர்.

கொட்டகலை பிரதிநிதி திரு பி. குமாரவேல் பேசியதாவது:-

தோட்டத் தொழிலாளர்கள் நிலைமை அபிவிருத்தி பற்றி மேஜர் பிரௌணின் சிபார்சுகளை அரசாங்கம் அமுலுக்குக் கொண்டுவரத் தவறிவிட்டது. எஸ்டேட்டுகளுக்குள் செலலும உரிமை சம்பந்தமான பிரச்னை இன்னும் தீர்க்கப்படவில்லை. தொழிற் சங்கத்தினர் உத்தரவின்றி தோட்டத்துள் புகமுடியாது. தேர்தல்போது தோட்டங்களில் பிரசங்கங்கள் நிகழ்த்த அனுமதிக்கப்படவில்லை. தொழிலாளருக்கு வயோதிப காலததில் பென்ஷன் வழங்கும்திட்டம் கொண்டுவரப்படவேண்டும்.

தொழிலாளர் தங்கள் பிறப்புரிமைகளையே கேட்கின்றனர். கல்வியறிவற்ற தொழிலாளர்களால் அவர்களது பெற்றோர் இலங்கையிலேதான் பிறந்து வளர்ந்தார்கள் என்பதை நிரூபிக்க முடியாது. பிரதம மந்திரி இந்த நெருக்கடியான நிலைமையை உணர முடியுமென நம்புகிறேன். இலங்கையிலும் இந்தியாவிலும் வீடு இல்லாதுவிடின் அவர்களின் நிலைமை எப்படி இருக்குமென்பதை உணரமுடியும்.

இலங்கை இந்திய காங்கிரஸ் ஒரு முன்னேற்ற ஸ்தாபனமாகும். தேசத்தின் சுதந்திரத்துக்காக ஆரம்ப காலம் முதல் பாடுபட்டு வந்துள்ளது. இத்தேசத்திலே எங்களுக்கு பாதுகாப்பு அவசியமில்லை.

மதவாச்சி தொகுதி பிரதிநிதி பேசுகையில் 25,000 மக்களைக் கொண்டதும் 1000 சதுரமைல் பிரதேசத்தை யுடையதுமான இந்த இடத்தினை அரசாங்கம் கரிசனை எடுத்து இதுவரை திருத்தவில்லை யென்றும் இத் தொகுதியின் குறைகள் பற்றியும் கிராமக் கமிட்டிகளுக்கு பணவுதவி, விவசாயிகளுக்கு உதவி யளிப்பது முதலியவைபற்றியும் கூறினர்.

தலவாக்கொல்லை பிரதிநிதி திரு. ஸி. வி. வேலுப்பிள்ளை பேசுகையில் கூறியதாவது:-

வேலைப் பிரச்னை ஒரு சமூக வியாதியேயாகும். மொத்த விற்பனை ஸதாபனங்கள் இந்த தொகுதில் ஏற்படுத்தப்படவேண்டும். புது யுகத்தில் இன்று பிரவேசித்துள்ளோம். ரயில் பிரயாணத்தில் மூன்றாவது வகுப்பு வண்டி பிரயாணம் மிகவும் கஷ்டத்தைக் கொடுக்கிறது. பொது மக்கள் இவற்றினால் மிகுந்த கஷ்டப்படுகின்றனர்.

பொத்துவில் தொகுதி ஜனாப் எம். எம். இப்ராஹாம் பேசியபின் திரு சோமவீர சந்திரசிரி பேசுகையில், விவசாயமந்திரி இலாகாவைப் பற்றி “அல்பாபாவும் நாற்பது திருடர்களும்” என்று குறிப்பிட்டதற்கு தம்மீது கோர்ட்டில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதென்றும், சிங்களத்திலே பேசுவதற்கு சில அங்கத்தினர்களுக்கு சபாநாயகர் உத்தரவு கொடுக்காததைக் கண்டித்துப் அரசாங்கத்தில் இருக்கும் சில அங்கத்தினர் சிங்களத்திலேயே பேசமாட்டாது இருக்கின்றனர் என்றும் பிரதிநிதிகள்சபையிலே பிரதமர் சிங்களத்தில் பேசும்படி தாம் சவால் விடுப்பதாகவும் கூறினர். சபாநாயகர் இடையிட்டு சிங்களததிலே சபையில் பேச அனுமதிகோரப்பட்டதே மறுக்கப்பட்டுளதென்று கூறினர். திரு சோமவீர சந்திரசிரி தொடர்ந்து பேசுகையில் ஒரு சிங்கள கவிதையைப் படித்தார்; அதில் நிதி மந்திரியின் பட்ஜெட் முழுவதும் அரசாங்க அங்கத்தினருக்கு பணம் கொடுப்பது பற்றிய விபரங்கள் இருப்பதாக கூறப்பட்டுள்ளது. இரவு எட்டு மணியானதால் சபை நடவடிக்கை இரவு போஜனத்துக்காக ஒத்திவைக்கப்பட்டது.

இரவு போஜனத்துக்குப்பின் 9 மணிககு கூட்டம் ஆரம்பித்தபோது திரு சோமவீர சந்திரசிரி தொடர்ந்து பேசுகையில் பட்ஜெட்டில் புதிய விஷயங்கள் இல்லையென்றும் போலிஸ் படையினருக்கு போதிய சம்பளம் கொடுக்க வேண்டுமென்றும் தொழிலாளரின் சம்பளவிஷயமாகவும் கிராமப்பகுதி மக்கள் வாழ்க்கை நிலை முதலியவை பற்றியும் கூறினர். சிங்களம், தமிழ்ப்பாஷைகளில் சபையில் அங்கத்தினர் பேசுவது அனுமதிக்கப்படவில்லையென்று இவர் மீண்டும் கூறியபோது சபாநாயகர் இடையிட்டு தாம் முதலிலேயே இதுபற்றி கூறியிருப்பதாகவும், சிங்களம், தமிழ் சுருக்கெழுத்தாளர்கள் ஏற்பாடு செய்யப்பட்டபின்னர் இப்பாஷைகளில் பேசுவது அனுமதிக்கப்படலாமென்றும் அது தம்முடைய பிழையல்லவென்றும் கூறினர்.

திரு விக்டர் ரத்னாயக்கா பேசுகையில் குதிரைப் பந்தயம் மக்கள் வாழ்க்கையைக் கெடுக்கிறதென்றும் குதிரைப்பந்தயத்தை இல்லாது ஒழித்துவிடவேண்டுமென்றும் சினிமா ஸ்தாபனங்கள் அதிகப்பணம் சம்பாதித்துள்ளனவென்றும் அவற்றை அதிக வரி செலுத்தும்படி செய்யினும் பாதகமில்லையென்றும் தேயிலை வருமானஙகள் பற்றியும் லஞ்சம் ஊழல்கள் பற்றியும், பொது அரசாங்க உத்தியோகஸதருக்கு அதிக சம்பளம் கொடுக்கவேண்டுமென்றும் விவசாயம் பற்றியும் கூட்டுறவு இயக்கம், தமது தொகுதியின் அபிவிருத்தி பற்றியும் கூறினர். இரவு 10 மணியானதால் சபை நடவடிக்கை இன்று பிற்பகல் ஒருமணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

மட்டக்களப்பு கூட்டுறவு வங்கி

மட்டக்களப்பு, டிச 6

மட்டக்களப்புக் கூட்டுறவு மத்திய வங்கியின் ஐந்தாவது வருடாந்தப் பொதுக் கூட்டம் திரு டி. ஸீ. ஆர். குணவர்தன தலைமையில் நடைபெற்றது. கடந்த வருடத்தில் மொத்தம் 10 ஆயிர ரூபா லாபமேற்பட்டதாக அவர் தெரிவிததார்.

கொழும்பு, டிச. 9

சென்ற ஞாயிற்றுக்கிழமை வண்ணார் பண்ணை வைததீஸ்வரவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற ஓர் பொதுக் கூட்டத்தில், வட இலங்கை குடிசைக் கைத்தொழில சங்கம் என்ற பெயரில் ஓர் சங்கம் ஸ்தாபிக்கத் தீர்மானிக்கப்பட்டது. தலைவராக எம். சுவாமிநாதனும் காரியதரிசியாக வி சோமசுந்தரமும் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்தியாவின் கலாச்சாரம்

அமெரிக்காவில் பரப்ப ஸதாபனம்

5 லட்சம் டாலர் செலவில் நிறுவப்படுகிறது

நியூயார்க், டிச. 9

இந்தியாவின் கலாச்சாரத்தை அமெரிக்காவில் பரப்பும் பொருட்டும் அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்குமிடையே பரஸபர பண்பாடான உறவை ஏற்படுததுவதற்காகவும் 1948-வது வருடம் நியூயார்க் நகரில் 5 லட்சம் டாலர் செலவில் ஓர் ஸதாபனம் நிறுவப்படும் அதற்கு இந்தியா கலாச்சார ஸதாபனமென்று பெயர். இந்த ஸதாபனத்தின் நிர்வாக சபை ஏற்கனவே நிறுவப்பட்டுவிட்டது. இப்படிப்பட்ட பரஸபர கலாச்சார உறவு ஏற்படுத்தும் ஸதாபனம் அமெரிக்காவிலே இதுதான் முதலாவதாகும். 1948ல் இந்த ஸதாபனம் திறக்கப்படும்போது பெரியதோர் இந்தியக் கலைப் பொருட் காட்சி நடைபெறும். கி. மு. 30-வது நூற்றுண்டிலிருந்து கி. பி. 19-வது நூற்றுண்டு வரையுள்ள இந்தியாவின் கலைப் பொருட்கள் அக்காட்சியில் வைக்கப்படும்.

இந்த ஸதாபனத்திற்கு ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் தலைவராவார். டாக்டர் பிதன் சந்திரராய் கௌரவ தலைவர். இதன் நிர்வாக சபையில் அமெரிக்காவின் கண் காட்சி சாலைகளின் நிபுணர்களும், அமெரிக்க சர்வ கலாசாலைகளின் பேராசிரியர்களும் அங்கத்தினர்களாக இருக்கின்றனர். இந்த ஸதாபனததில் இந்தியக் கலைப் பொருட்காட்சி சாலையொன்றும் இந்திய கலாச்சாரத்தைப்பற்றிய நூல் நிலையமொன்றும் (கலை, புராதீன ஆராய்ச்சி, சங்கீதம், நடனம், இலக்கியம், தததுவம், சமயம், பாஷைகளைப்பற்றிய நூலகள்) நிரந்தரமாக நிறுவப்படும்.

மாணவர்களும் பேராசிரியர்களும் தெரிந்துகொள்ளவேண்டிய அகராதி நூல்களுமிருக்கும். அந்த ஸதாபனம் அடிக்கடி சங்கீதக் கச்சேரிகளையும் நடனக் கச்சேரிகளையும் நடத்தும். இந்தியாவின் புராதீன நாகரீகததைப்பற்றி ஆராய தைப் பொருள் ஆராய்ச்சி நிபுணர்களை இந்தியாவுக்கு அனுப்பிவைக்கும். இந்திய விஷயங்களை அறிந்த நிபுணர்களைக்கொண்டு பிரசங்கங்கள் நடத்த ஒழுங்குசெய்யும். இந்திய சங்கீத வித்வ சிரோமணிகளும் நடன கலா நிபுணர்களும் இங்குவந்து அமெரிக்காவெங்கும் கச்சேரி நடத்த ஏற்பாடு செய்யப்படும். இந்தியாவிலும் அமெரிக்காவிலுமுள்ள பிரபலஸதர்களும் பொது ஸதாபனங்களும் இந்த ஸதாபனத்திற்கு பண உதவி அளிப்பார்கள் (ராய்ட்டர்)

வங்கி குமாஸ்தாக்களுக்கு உபகாரச் சம்பளம்

கொழும்பு, டிச 9

தொழில் சமூக சேவை மந்திரியின் பாராளுமன்றக் காரியதரிசி ஏ. ஈ. குணசிங்கா தலைமையில் வங்கிக் குமாஸதாக்கள் சங்கப் பொதுக் கூட்டம்ஒன்று நடைபெற்றது. வங்கி குமாஸதாக்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுப்பது சம்பந்தமாகத தாம் ஓர் திட்டம் தயாரித்து வருவதாகவும், 60 வயதுவரை வேலை பார்க்கக் குமாஸதாககளை அனுமதிக்கச் செய்ய தாம் முயன்று வருவதாகவும் அவர் கூறினர்.

நால்வர் நெருக்கடி தீர்ந்தது

லண்டன், டிச. 9

ஜெர்மன் சமாதான உடன்படிக்கையும் ஆஸதிரிய சமாதான உடன்படிக்கையும் வகுப்பதற்காக நான்கு வல்லரசுகளின் அந்நிய நாட்டு மந்திரிகள் மகாநாட்டில் மூன்று வார காலமாக ஏற்பட்டிருந்த நெருக்கடி தீர்ந்து விட்டது. ஜெர்மன் பொருளாதாரம்பற்றி பிரிட்டிஷ் அறிக்கையையும் ரஷிய அறிக்கையையும் ஆதாரமாக வைத்து விவாதத்தை ஆரம்பிப்பதென முடிவு செய்யப்பட்டது. (ராய்ட்டர்)

கிங்ஸ்லியில்
தினசரி மாலை 6 மணி, இரவு 9-30 மணிக்கும்
சனி, ஞாயிறு மெட்னி 2-30 மணிக்கும்

பார்க்கப் பார்க்க பரவசமூட்டும் பாவையர்
நடனங்கள், செவிக்கினிய கீதங்கள்,
கண்ணுக்கினிய காட்சிகள், உள்ளங் கவரும்
உயரிய நடிப்புகள் நிறைந்த

கன்னிகா

தினசரி ஆயிரக்கணக்கான மக்கள் கண்டு களிக்கும் படம்
என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம், டி. ஈ. வரதன், எம். எஸ. சரோஜினி,
எம். ஆர். சந்தானலக்ஷ்மி, காளி என். ரத்தினம் ஆகியோர் திறம்பட நடித்தது!

கிரவுன் தியேட்டர்
ஸ்கின்னர்ஸ் ரோடு,
மருதானை.
தினசரி மாலை 6-15, இரவு 9-30 மணிக்கும், சனி, ஞாயிறு மெட்னி 2-30 மணிக்கும்
சித்ரகலாவின் உன்னத தயாரிப்பு
முதல் நம்பர் நடிகர்கள் எடிஜெயமான, ருக்மணி தேவி மற்றும் பலர் நடிக்கும்
“இழந்த உறுதி”
என்னும் வர்ணம் தீட்டப்பட்ட முதல் சிங்களப் படம்
புதிய இயந்திர அமைப்புகளுடன் இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

பீடிச் சக்கரவர்த்தி.
த.பி.
சொக்கலால்
ராம்சேட் பீடி
2 பீடிரீங்லேபில்
சொக்க லால்
ராம் சேட்

அற்புதமானது! ஆனந்தமளிப்பது!!
மனதிற்கு பரவசமும் உல்லாசமும் ஊட்டுவது
இப்படியாக பாலர் முதல் பெரியோர்வரை ஏகோபித்து புகழ்வதெல்லாம்
மேனகா மார்க் லொசிஞ்சர்களே!

மேனகா மார்க் லசிஞ்சர்கள் ஒவ்வொன்றிலும் தேகத்திற்கு வலிமை அளிக்க வல்லதும்; இரத்த விருத்தியுண்டாக்குவதுமான குளுக்கோஸ் எனும் சத்து சேர்ந்திருக்கிறது. அத்துடன் மனதிற்கு நல்மணமும், நற்சுவையும் கொடுக்கக்கூடிய பழரசச் சத்தும் சேர்ந்து இதற்கென்றே இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட நிபுணர்களைக்கொண்டு சாஸ்திரமுறைப்படி தயாரித்து யாவருக்கும் எளிதில் கிடைக்கக்கூடிய விதத்தில் சரசமான விலையில் டின்களில் அடைத்து விற்கப்படுகின்றது.

மேனகா மார்க் லொசிஞ்சர்
எல்லா முக்கியவியாபாரிகளிடமும்
கிடைக்கும்

தயாரிப்பாளர்கள்:-
ராஜா இன்டஸ்ரியல் வேர்க்ஸ்,
71, புதிய சோனகத் தெரு, கொழும்பு.
Telegram: “SWEETS” Telephone: 2737

கீழ்க்காணும் வியாபாரிகளை நமது முக்கிய விநியோகஸதர்களாக நியமித்திருக்கிறோம்.

V. T. செல்லையா அன் கோ, குருநாகல்
K. முருகேசு அன் கோ, ” ”
மனோன்மணி ஸ்டோர், கேகாலை Kegalle.
W. E. M. பாஷா சாகிப் அன் கோ, நாவலப்பிட்டி
N. B. அந்திரிஸ் சில்வா அன் கோ, கம்பளை
M. சேகு அலி ராவுததர் அன் கோ, வத்துகாமம்
A. S. M. முகைதீன் அன் கோ, மாத்தளை
M. T. செல்லையா அன் கோ, கெக்கிராவ
K. சிவகுருநாதப்பிள்ளை அன் சன்ஸ், யட்டியாந்தோட்டை
S. நாகமுத்து, ருவான்வெலை.

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ லிமிட்டெட்டிற்காக, 1947-ம வருஷம டிசமபர் மாதம் 11-ம் தேதி இப்பத்திரிகை 194 ஏ, தட்டாரத்தெரு, கொழும்பு சுதந்திரன் அச்சுக்கூடத்தில் அச்சிட்டு கொழும்பு மெயின்ஸ்டிரீட்டில் இருக்கும் சிங்காரம் நடராசா அவர்களால் வெளியிடப்படுவது